183

ரிஜிஸ்டர் நம்பர், M. 2285.

அருட்பெருஞ்ஜோதி.

அருட்பிரகாசம்.

திங்கள் வெளியீடு.

எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

மலர் 1. } பிரபவ ஆண்டு கார்த்திகைத்திங்கள். 11-ம் நாள். } இதழ் 7.

தலையங்கம்.	184
ஷடாந்த சமரசம்.	189
ஜீவகாருணிய ஒழுக்கம்.	194
அன்பு.	196
சித்தர் மான்மியம்.	202
ஆசாரசீர்திருத்தமென்னும் நூதனஅபிப்பிராயம்	204
பிராணனும் அதைக்காப்பாற்றும் வழியும்.	205
மாணவர் பகுதி	207
கதம்பம், ...	209

வடலூர், தி. கோ. வரதராஜர்
பத்திராதிபர்.

பிறையாறு,
இரத்தின விலாச அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

வருடசந்தா ரூ 2.] 1927. [ஆயுட் சந்தா ரூ 25

[Library stamp: ... REGISTRAR OF BOOKS ... JAN ... MADRAS]

சங்காபிமானிகளுக்கோர் எச்சரிக்கை.

ஆண்டவர் ஒருவருள்ளாரென்றும் அவர் பொதுப்பட உலகத்துள்ளார் யாவரும் சன்மார்க்கப் பெரும்பயன்பெற்று நித்தியவாழ்வு வாழ்தற்பொருட்டு வெளிப்படக் காரியப்படுகின்றனரென்றும், அதுகாலையில் நாமும் ஆன்மலாபத்தைப்பெற்றுக்கொள்வோமென்றும் நம்பி இங்கேவசிக்கும் யாவரும் வழிபடும்விஷயத்தில் ஒருதடையும் சொல்லாது ஒத்திருத்தலவசியம். அன்றியும் காலபேதத்தால் அல்லது மற்றவகையால் அவ்வத்தருணங்களில் நேரிடும் குரோதத்தால் விளையும் துவேஷாதிகள் உண்டாயினும், அல்லது உண்டாகிறதாயிருந்தாலும், உடனே ஜாக்கிரதைப்பட்டு அதை முற்றிலும் மறந்துவிடல்வேண்டும். அப்படி யிருத்தல் மேல்விளைவை உண்டுபண்ணுதிருக்கும், அப்படி யினிமேல் ஒருவரையொருவர் அதிக்கிரமித்த வார்த்தைகளால் சண்டை விளையத்தக்கதாக வைதாலும் அப்படிவைதவர்களையும் அந்தவைதலைக்கேட்டு சகிப்பவர்களோடு மறுபடி அத்துவேஷத்தை ஒருங்கே விட்டு மறந்து மனக்கலப்புடன் மருவுதல்வேண்டுவது. அப்படி மருவாதவர்களை உடனே ஒதுக்கிவிடவேண்டியது. அல்லது குரோதத்தால் விளையும் அக்கிரம அதிக்கிரம வார்த்தைகளைக்கேட்டு தாங்கள் எதிர்த்து வார்த்தையாடாமல் கூட்டத்தாரில் அப்போதிருக்கவாய்ந்த இரண்டொருவர்க்குத் தெரிவித்தல்வேண்டும். அப்படித்தெரிவிக்காத வர்களும் எதிர்த்து சண்டைதொடுப்பவர்களும் இங்கிருத்தலனவசியம். அப்படிப்பட்டவர்கள் ஒருபேச்சுமில்லாமல்இந்தஇடம்விட்டுப் போய்விடத்தக்க முயற்சி ஒவ்வொருவரும் செய்தல்வேண்டும்.

இங்ஙனம்,

சிதம்பரம், இராமலிங்கம்.

என ஸ்ரீமத், வள்ளற்பெருமான் நம்மவர்களுக்குத் தெரிவித்திருக்கின்ற முறையிலடங்கி நடக்கக் கடமைப்பட்டிருக்கின்றோமாதலின், நாம் இனிமேல் எந்தவகையிலுங் குரோதத்தை உண்டுபண்ணுஞ் செய்கையிற் பழகாது வைதாரையும் வாழ்த்தினராகக் கொள்ளுதல் வேண்டுமென எனதான்மநேய சகோதரர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ப—ர்

உள்ளுறை.

தலையங்கம்.	பத்திராதிபர்.
ஷடாந்த சமரசம்.	சீகாழி ஸ்ரீமத், ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள்.
ஜீவகாருணிய ஒழுக்கம்.	ஸ்ரீமத், திருவருட்பிரகாச வள்ளலார்.
அன்பு.	பத்திராதிபர்.
ஸ்ரீயத் இராமலிங்கசுவாமிகள்	தில்லையாடி ஸ்ரீமான், த. வேதியப் பிள்ளை அவர்கள்.
ஸ்ரீமத், இராமலிங்கசுவாமிகள் ஜாதகம்.	தருமச்சாலை சுப்பராய சுவாமிகள்.
பிராணனும் அதைக்காப்பாற்றும்வழியும்,	தில்லையாளி. ஸ்ரீமான், நா. தம்பியப்ப செட்டியாரவர்கள்.
சித்தார்ணவம்.	சீகாழி ஸ்ரீமத், நாராயணசாமி அய்யர் அவர்கள்.
ஆசாரசீர்திருத்தமென்னும் நூதன அபிப்பிராயம்	சீகாழி ஸ்ரீமத், M. S. இராஜகோபாலஅய்யரவர்கள். B. A; L. T.
தமிழ் ஆயுள் வேதம்	தில்லையாளி வைத்தியபதி, ஸ்ரீமான், சி. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்.
மாணவர் பகுதி.	[illegible]றையாறு தமிழுவாத்தியாயர், ஸ்ரீமான், ப. அ. கிருஷ்ணசுவாமிப்பிள்ளை அவர்கள்.
கதம்பம்.	உத்தரஞான சித்திபுரத்து சிற்சபையமைப்பு, சுவாமிகளின் அற்புதம், கிளைச்சங்கம் முதலியன.

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்
சிதம்பரம் ஸ்ரீமத்.
இராமலிங்க சுவாமிகள்.

ஓம்.

திருச்சிற்றம்பலம்.

அருட்பெருஞ்சோதி.

அருட்பிரகாசம்.

உத்தரஞான சிதம்பரம்
ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சங்க
நிலயத்தினின்றும்
வெளிவருவது.

மலர் 1	சாலி சகாப்தம் 61 பிரபவ ஆண்டு கார்த்திகைத்திங்கள் 11-ம்நாள் 1927-ஸு நவம்பர்-மீ 26-உ	இதழ் 7

உத்தரஞான சிதம்பர மான்மியம்.

ஒத்தாரையு மிழிந் தாரையு நேர்கண் டுவக்கவொரு
மித்தரை வாழ்விப்ப தேற்றூர்க் கமுதம் விரும்பியிடு
வித்தாரைக் காப்பது சித்தாடு கின்றது மேதினிமேற்
செத்தாரை மீட்கின்ற துத்தர ஞான சிதம்பரமே.

அருட்பெருஞ்சோதி மான்மியம்.

கண்டே னருட்பெருஞ் சோதியைக் கண்களிற் கண்டுகளி
கொண்டேன் சிவானந்தக் கூத்தர்டிக் கொண்டிக் குவலயத்தே
தொண்டே திருவம் பலந்தனக் காற்றிச் சுகவமுத
முண்டே னுயிர்தழைத் தோங்கு கின்றே னுவ்வுறவப்புறவே.

சிற்சத்தி மான்மியம்.

மாலக் கொடியேன் குற்றமெலா மன்னித் தருளி மாணமெனுஞ்
சாலக் கொடியை யொடித்தெனக்குட் சார்ந்து விளங்குந் தனிக்கொடியே
காலக் கருவைக் கடந்தொளிர்வான் கருவுங் கடந்து வயங்குகின்ற
கோலக் கொடியே சிவஞானக் கொடியே யடியேற் கருளுகவே.

உலகப்பேறு.

விடம்பெற்ற வுயிரொலாம் விடமற்று வாழ்ந்தன
மடம்பெற்ற மனிதர்கள் மதிபெற்று வாழ்கின்றார்
திடம்பெற்றே யெழுகின்றார் செத்தவர் தினந்தினம்
நடம்பெற்ற வருட்பெருஞ் சோதியார் நண்ணவே.

அருட்பெருஞ்சோதி ——— தனிப்பெருங்கருணை.

திருவருள் முறையீடு.

வர்ன்வேண்டிக் கோண்ட மருந்தேழக் கண்கோண்ட மர்மணியேநினை
நான்வேண்டிக் கோண்டது நின்னடியார்க்கு நகைதருமீ
தேன்வேண்டிக் கோண்டனை யென்பா ரிதற்கின்னு மேனிரங்காய்த்
தான்வேண்டிக் கோண்ட வடிமைக்குக் கூழிடத் தாழ்ப்பதுண்டே.

நானே ரெளிமை யடிமையென்றே நல்ல னல்லனென்று
தானே நின்னன்பர் தகாதென்ப ரென்று தாளினைந்தோ
வேனே நின்னுள்ள மிரங்கிலை யின்னு மிரங்கிலையேற்
கானேடு வேன்கோல் கடல்விழ வேன்கோல்முக் கண்ணவனே.

நாடிநின் றேநினை நான்கேட்டுக் கோள்வது நண்ணும்பத்துக்
கோடியன் றேயொரு கோடியி னூற்றொரு கூறுமன்றே
தேடிநின் றேபுதைப் போருந் தருவர்நின் சீர்நினைந்துட்
பாடியந் தோமனம் வாடிநின் றேன்முகம் பார்த்தருளே.

சத்திய ஞானசங்கம்.

உத்தரஞான சிதம்பரமென்னும் வடலூரிலே ஸ்ரீமத் திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளால் எற்படுத்தப்பட்ட சத்தியதருமச்சாலை, சத்தியஞானசபை, சத்தியஞானசங்கம் ஆகிய முத்திறக்கொள்கையில் முன்னதிரண்டையும் ஐந்தாவது ஆறுவது சஞ்சிகைகளிற் கூறி இப்போது சத்தியஞான சங்கத்தைப்பற்றி இச்சஞ்சிகையிற் கூறப்போந்தனம். சத்தியஞானசங்கம் என்பது உண்மைஞானிகளின் கூட்டமென்பது பொருள். அதாவது உபாயஞானமென்றும் உண்மைஞானமென்றும் இருவகைப்படும். அவற்றுள் உபாயஞானத்தினுலே உண்மைஞானத்தை யடையவேண்டியே உபாயஞானங்களைப் போதிக்குஞ் சமயசாத்திரங்களும் சமயஆலயங்களும் சமய வழிபாடுகளும் போலாது உண்மைஞானத்தை உண்மைஞானத்தினுலே அடையுமுறையைப் போதிக்குங்கூட்டமாகும். குருடனொருவனுக்குச் சூரியவெளிச்சங் காட்டவேண்டுமானுல் அனேகதந்திரங்களினுலே அவன்மனதுக்குச் சமாதானப்படுத்தவேண்டுமல்லவா? அவ்வணம் சூரியவெளிச்சமானது கண்ணுடியைப்போல வெண்மையாயிருக்கும் என்று கண்ணுடியைக்காட்ட அக்கண்ணுடியைக் குருடன் தடவிப்பார்த்து இப்படித்தானிருக்குமென்

றுத் தன்மனதுக்குச் சாந்தியடைவதுபோல நம்முன்னோர்கள் நமது ஆன்மதிருஷ்டியானது மறைவுபட்டு அஞ்ஞானவிபரீத சந்தேகங்களினாலே நம்மைநாம்மறந்து உலகமே மெய்யாகக்கண்டு களித்த காலத்திலே நமக்கு உண்மையுணர்ச்சியை உண்டு பண்ணுவான் வேண்டி நமக்குச் சிலகற்பனைகளைக்காட்டி வைத்தனர்கள். நாமும்நமது ஆன்மவிளக்க மில்லாததினாலே அக்கற்பனைகளையே மெய்யாகக்கண்டு காலத்தை வீணேபோக்கி விட்டோம். அவ்வபக்குவகாலத்தி லத்தூலகற்பனையைக்காட்டிய பெரியார் இப்பக்குவகாலத்தி லித்தூலகற்பனைகளை யொழிக்க முன்வந்துளார்களென்பதை நாம்மறத்தற் பாற்றன்று. ஏனெனில் நாம்காட்டக் காண்கின்றோமன்றி நாமேகாண்கின்றோமில்லை. ஆதலின் "எல்லா மவன் செயலே,, யென்னும் ஆன்றோர் வாக்கியப்படி நாம்காலத்திற்கேற்ற முறைமையைக்கையாளுதல் வேண்டும். அன்றியும், நாம் ஒருபொருளை இருளிலறிய வேண்டுமேயானால் விளக்கத்தைக் கொண்டுதான் அறிதற்கூடுமல்லது வேறுஎந்தவிதமான கற்பனைகளாலு மறிதற்கியலாது. அதைப்போலவே நாமும் அறியாமையாகிய இருளிலே நம்மைக் காணவேண்டுமானால் அறிவாகிய வெளிச்சம் பிரதானமல்லவா? அவ்வெளிச்சம் வெளிச்சமாகயிருக்கவேண்டுமேயொழிய வேறெவ்விதமாகவு மிருக்கமுடியாதென்பது கண்கூடல்லவா. இதுபற்றியே ஸ்ரீமத்வள்ளலார்.

தோழிக்குரிமைகிளத்தல் (8)

ஒளியொன் றேயண்டபகி ரண்டமெலாம் விளங்கி
யோங்குகின்ற தன்றியண்ட பகிரண்டங் களிலும்
வெளிநின்ற சராசரத்து மகத்திலொடு புறத்தும்
விளம்புமகப் புறத்திலொடு புறப்புறத்து நிறைந்தே
உளிநின்ற விருணீக்கி யிலங்குகின்ற தன்மை
உலகறியும் நீயறியா தன்றுகண்டாய் தோழி
தளிநின்ற வொளிமயமே வேறிலையெல் லாமுந்
தானெனவே தாகமங்கள் சாற்றுதல் சத்தியமே.

எற்றிடுவே தாகமங்க ளொளிமயமே யெல்லா
மென்றமொழி தனைநினைத்தே யிரவி லிருட்டறையில்
சாற்றிமெண் பாத்திரத்தை மரவட்டில்களைக் கற்
சட்டிகளை வேறுபல சார்ந்த கருவிகளைத்

தேற்றமிகு தண்ணீரைச் சீவர்கள் பற்பலரைச்
  செப்பியவவ் விருட்டறையிற் றனித்தனிச்சேர்த் தாலும்
ஊற்றமுறு மிருணீங்கி யொளிகாண்ப துளதோ
  யுளதேல்நீ யுரைத்த மொழியுளதாகுந் தோழி.

எனக்கூறியிருக்கின்றனர்.

நாம்நம்மைக் காணுவதேன். நாம்நம்மைக் காணுமலிருக்கின்ரேமா எனச்சிலர்கூறுவர். நாம்நமது தூலதேகமே நாமாகவெண்ணியிருக்கினரேம். நமதுதூலதேக நாமல்ல. நமது நித்திரையில் தூலதேகத்தைக் காணுமலிருக்கின்ரேமே? நாமாயிருந்தால் காணுமலிருக்கமுடியாது. ஆதலால் இத்தூலதேகத்திற் கன்னியமாய் நாமிருக்கின்ரேமென்பதை நாம்அறிதல்வேண்டும்.

இதுபற்றியே ஸ்ரீமத்வள்ளலார்

வாதனைக்கிரங்கல் ௬-வது பாசுரம்.

ஆர்நீயென் றெதிர்வினவில் விடைகொடுக்க வறியா
  வறிவிலியேன் பொருட்டாக வன்றுவந்தென் றனக்கே
ஏர்நீடும் பெரும்பொருளொன் றீந்துமகிழ்ந் தாண்டீ
  ரின்றும்வலிந் தெளியேன்பா லெய்தியொளி யோங்கப்
பார்நீடத் திருவருளாம் பெருஞ்சோதி யளித்தீர்
  பகருமெலாம் வல்லசித்திப் பண்புறவுஞ் செய்தீர்
கார்நீட நான்ருனைய் நடம்புரி கின்றீரே
  நடராசரே நமக்கு நானெதுசெய் வேனே.

எனக்கூறியிருக்கின்றதால் நாமொருவனுண்டென்பதும் நாமடையவேண்டியபேறு ஒன்றுஉண்டென்பதும் அதைக்கொடுப்பதற்கொருவருண்டென்பதும் விளங்குகின்றதாதலின், நாம்நம்மை அறிவதற்குத் துணையாகிய அருட்பெருஞ்சோதியைப் பெறுதல்வேண்டும். அச்சோதிவிளங்குமிடமே சத்தியஞானசபை. அச்சோதியைக் காணுதற்குரியவர்களே சத்தியஞான சங்கத்தினர். இச்சங்கத்தினரி லொருவராக ஸ்ரீமத்வள்ளலாரிருந்திருக்கின்ரு ரென்ருல் இச்சங்கத்தின் பெருமையை எவ்வாறுரைத்தற்கூடும். சன்மார்க்கசங்கத்தாருக்கு ஸ்ரீமத்வள்ளலார் கூறியதாவது:—

சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியே னுமது
 தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் றயவினொடுங்கேட்பீ
ரென்மார்க்கத் தெனைநமக்கு ளொருவனெனக் கொள்வீ
 ரெல்லாஞ்செய் வல்லநம திறைவனையே தொழுவீர்
புன்மார்க்கத் தவர்போலே வேறுசில புகன்றே
 புந்திமயக் கடையாதீர் பூரணமெய்ச் சுகமாய்த்
தன்மார்க்கமாய் விளங்குஞ் சுத்தசிவமொன்றே
 தன்னாணை யென்னாணை சார்ந்தறிமி னீண்டே.

எனக்கூறியிருக்கின்றார். அன்றியும் இச்சன்மார்க்கத்தின் மாபா வது. சாகாக்கல்வி, திடவறிவு, வேகாக்கால், பூரணவல்லபம், எனநான்காகும்.

சாகாக்கல்வியாவது, அருட்பெருஞ்சோதியை மறவாதிருத் தல். திடவறிவு, தெய்வமொன்றே அத்தெய்வம் அருட்பெருஞ் சோதியேயெனத் திடப்பட்டிருத்தல்.

வேகாக்கால், பிராணவாயுவைத் தன்வயப்படுத்தி அதனாற் சகலதொழிலுங் கைவரச்செய்தல்.

பூரணவல்லபம், தற்போத மிழத்தல், தொழிலற்றிருத்தல், மயக்கமின்றி விளங்குதல், அதிசயமில்லாதிருத்தல், மறைப்பை யொழித்தல், இந்நான்கும் ஒரேகாலத்திலே கிடைக்கப்பெற்றுத் த மடையும்பேறு உலகம்பெறுதல் வேண்டுமெனத் தன்னலமொ ழித்து, எல்லாம்வல்லசித்தனுய்ப் பொதுநோக்கா யுழைத்தலே, முடிந்தஇன்பமாம். என ஸ்ரீமத்வள்ளலார்,

சாகாதசல்வியே கல்வி யொன்றேசிவந்
 தானென வறிந்த வறிவே
தகுமறிவு மலமைந்து வென்ற வல்லபமே
 தனித்த பூரண வல்வபம்
வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்
 விளைய விளைவித்த தொழிலே
மெய்த்தொழில தாகுமிந் நான்கையு மொருங்கே
 வியந்தடைந் துலக மெல்லாம்

மாகாத லுறவெலாம் வல்லசித் தாகிவிறை
வானவரமே யின்பமாம்
மன்னுமிது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்
மரபென்றுரைத்த குருவே
தேகாதி மூன்றுநான் றருமுனருள்செய்தெனைத்
தேற்றியருள் செய்தகுருவே
சிற்சபையி னடுநின்ற வொன்றான
கடவுளே தெய்வநடராச பதியே.

எனக்கூறியுள்ளார்.

இச்சங்கமானது ஷடாந்தசமரச சுத்தசன்மார்க்க சத்திய ஞான சங்கமென் ஸ்ரீமத்வள்ளலாரால் கொடுத்தபெயராதலின் ஷடாந்தமென்பதுயாது? சமரசமென்பதுயாது? சுத்தமென்பது யாது? சன்மார்க்கமென்பதுயாது? சத்தியஞானமென்பதுயாது? சங்கம்என்பதுயாது? என்பதைப்பற்றி விபரமாக சீகாழி ஸ்ரீமத் ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை அவர்களா லெழுதப்பட்டு வருகின்றபடியால் இச்சஞ்சிகை முதலாவது இதழிலேயிருந்து யாவரும் எளிதிலறியக்கூடும். இச்சுத்தசன்மார்க்க சங்கத்தால் யாமடையும் பயனென்னையோ வென்னில்?

பொத்திய மலப்பிணிப் புழுக்குரம்பைதான்
சித்தியற் சுத்தசன் மார்க்கச் சேர்ப்பினல்
நித்தியமாகியே நிகழு மென்பது
சத்தியஞ் சத்தியஞ் சகத்துளீர்களே
ஒவுறுத் துயர்செயு முடம்புதா னென்றுஞ்
சாவுறு தின்பமே சார்ந்து வாழலாம்
மாவுறுச் சுத்தசன்மார்க்கச் நன்னிலை
மேவுறர் தங்களை விடுக நெஞ்சமே

என ஸ்ரீமத்வள்ளலார் கூறியிருக்கின்றார்.

இதனல் சரீரமானது இறவாது. சரீரத்தோடு உண்மை முத்தி யடையலாம் எனக்கூறியிருப்பதால் இவ்வுண்மையை அனுபவ ஞானிகளே உணர்வார்கள். அவ்வுண்மை ஞானிகளின் தன்மை யெப்படியென்னில்,

சேய்போ லுலகத் துயிரையெல்லா மெண்ணிச் சேர்ந்துபெற்ற
தாய்போ லுரைப்பர் சன்மார்க்க சங்கத்தவர் சாற்று மெட்டிக்
காய்போற் பிறர்தமைக் கண்டாற் கசந்துட் கடுகடுத்தே
நாய்போற் குறைப்பர் துன்மார்க்க சங்கத்தவர் நானிலத்தே.

எனக் கூறியிருக்கின்றனர்.

ஆதலால் உண்மையுணர்ச்சி விளங்கு மிக்காலத்திலே இவ்வுண்மைத்துறையி லொவ்வொரு மனிதர்களுமிறங்கி உண்மையனுபவத்தைபெற்றுத் தன்னைப்போற் பிறரு மிவ்வின்பத்தையடையச்செய்விப்பார்களாக. சுபம்! சுபம்!! சுபம்!!!

அருட்பிரகாசம் அவாவும் அன்பர்காள்!

நமது அருட்பிரகாசமொன்றே முத்தி அல்லது விடுதலைக்குப்பாடு படுவது. பந்தம்அல்லது அடிமைத்தன்மையை ஒழிப்பதற்கேன்றே வெளிவருவது. அறிவுஅல்லது தன்னம்பிக்கைக்குழைப்பது. நமது வள்ளற்பெருமானுரைத்த அருள்மொழிகளைப் பரப்புவது. நரைதிரைமூப்பு மரணத்தைத் தொலைக்கவழிகாட்டுவது. படிப்போர்க் கமுதம்போன்றது. உணர்வார்க் குயிராய் விளங்குவது. ஆதலால் இதனைக்கண்ணுறும் மெய்யன்பர்கள்பலரும் பொதுத்துறையிலுழைக்க முன்வந்து பல்லிடங்களிலுஞ் சந்தாதார்களை யேற்படுத்தி இவ்வருட்பிரகாசத்தை எங்கும் பிரகாசிப்பிக்க வேண்டுகின்றனன். ப—ர்

ஷடாந்த சமரசம்.

சீகாழி ஸ்ரீமத், ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள்

(மலர் 1. இதழ் 6. பக்கம் 160 ன் தொடர்ச்சி)

கர்த்துருத்துவம், அகர்த்துருத்துவம், அந்நியதாகர்த்துருத்துவமென ஈச்சுரன் பிரபுத்துவ சாமர்த்திய குணத்திரய முண்டென்றறிக. இனி, சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமென ஈச்சுரன் பஞ்சகிருத்தியமுண்டு. ஆனால், நிர்விகாரத்துவமாகிய பிரமசொரூபனான ஈச்சுரனிடத்தில், சிருஷ்டியாதி வியாபாரவெகு கிர்த்தியங்கள் எந்தப்பிரகாரத்தாலா மென்னில்,

எப்படிச்சூரியன் இச்சாயத்தனமில்லாமல், தன்வருஷகிரணத்தால், விருஷ்டிரூபமான சலத்தைவிட்டுப்பின்னந்த சலத்திற்றனே பிரதி பிம்பித்து மேகாதிகளால் அதனை மறைத்து, இமகிரணத்தால் அதனைத்தடுத்து உஷ்ணகிரணத்தால் அந்தச்சலத்தைத் திரும்ப வாங்கிக்கொண்டு அந்தப்பிரதிபிம்பத்தைத் தன்னுடனே கூட்டிக் கொள்ளுவன், அப்படியே ஈச்சுரனுந் தன் மாயாசத்தியுடனே கூடித் சித்துப்பிரதானத்தால், நிமித்தியகாரணனுயும் சடப்பிர தானத்தால், உபாதானகாரணனுயும், புத்தியாதிகாரியங்களைச் சிருஷ்டித்துச் சீவரூபத்தாற்றனே பிரவேசித்துக் கர்மத்தால், போக்துருவென்றும், நியமயகசக்தியால் போக்கிய போக்துருக்க ளென்றும் நியமித்து ருத்திரரூபத்தால் அந்தக்காரியரூபங்களைச் சங்கரித்துப்பின் சுருதிகுருரூபத்தால் அந்தச்சீவனைத் தன்னுடனே ஐக்கியஞ்செய்து கொள்ளுவ னென்றறிக. இனி வியஷ்டி, சமஷ்டியெனச் சீவஈச்சுரருக்கு விபகார வியாபகத்துவயமுண்டு, அவற்றுள், அநேக விருக்ஷமுள்ளது ஒருவனமென்றூற்போல, அநேகசீவரெல்லாரையும்,, தன்னுத்துமனென்னும் அபிமானமே ஈச்சுரனுடைய சமஷ்டிரூபமாம். அந்தவனத்தில் இதுவொரு விருக்ஷம், இதுவொருவிருக்ஷமென்று வெவ்வேறே குறியிடுவது போலப் பின்னுபின்ன தேகத்துவாபிமானமே சீவனுடைய விய ஷ்டிரூபமா மென்றறிக. இனி விஸ்வாதி சீவத்திரயாதிஷ்டான சைதந்நியன், துரியன். சுயஞ்சத்தார்த்தன், சாக்ஷிகன், பாரமார்த் திகசீவன், பிரத்தியேகாத்மன், அநுசந்தாத்துரு, அவிச்சின்ன சீவன், துவம்பதலக்ஷியார்த்தன் முதலானவை கூடஸ்தன்பரியாய நாமமென்றறிக. இனி அந்தரியாமியாதி, ஈச்சுர திரயாதிஷ்டாத் துரு, பரமாத்மன், பரதத்துவம், பரப்பிரமம், சர்வாதிஷ்டாத்ரு, விசித்தசித்து, தற்பதலட்சியார்த்தன் முதலானவை பிரமத்தின் பரியாயநாமமாம். இஃது மிருத்திகையொன்றே நாமரூபத்தால் கடாதி வெகுபேதமானூற் போலவும், சுவர்ணமொன்றே வங்கி சாரம்பத்தால் கடக, மகுடாதியாபரண மானூற்போலவும், சல மொன்றே வாயுவசத்தால், பேன, புற்புத, தரங்காதி சமுதாய மானூற்போலவும், தீபமொன்றே-கடத்தின்துவார பேதத்தால் வெகுரூபமானூற்போலவும், மாருதமொன்றே வேணுரந்திரத்தால் மந்திர, மத்திம, தாரமானூற்போலவும், சுரமொன்றே பாடுவான் குறிப்பால் நாநாஇராகமானூற்போலவும், கதலீதளாீபமொன்றே

கண்டத்தால், கரிதுரகாதி நாநாபேதமானாற்போலவும், இலக்க மொன்றே-பிந்துபேதத்தால், தச, சத, சகஸ்திராதியானாற்போல வும், சித்தொன்றே-பூர்வோக்த சீவேச்சுராதிபேத விகாரமாயிற் றென்று சொல்லப்படும், இவையெல்லாந் திருக்குவிவேகமென் றறிக. இனிச்சந்திரனிடத்தில் அநாதிகளங்கமானது எப்படிச் சந் திரனை ஆசிரயித்து அவனை மறையாமல் அவனால் விளங்குகிற தெப்படியோ அப்படியே நானென்னை யறியேனென்னும் லோ கப்பிரசித்த விவகாரத்தால், ஆத்மனையடுத்து அவனைமறையாமல் அவனாலறிவித்துக் கொள்வதாகியும், அக்கினியின் சுடுந்தொழில், மணிமந்திராதி பிரயோகத்தால் பந்திக்கப்பட்டுத்தான் அக்கினி ரூபமுமல்லாமல் அக்கினியை விட்டுத்தான் தோன்றுவதுஞ் செய்யாமல், ஸ்போடகாதிகாரியோதயமெப்படியோ அப்படியே பிரமசொரூபமு மல்லாமல், பிரமவிலக்ஷணமாயுந் தோன்றாமல் ஆகாசாதிகாரியோதய முண்டாக்குகிறவளாகியும், அகடிதகடனா சாமர்த்தியாகியும், சர்வதத்துவங்களுக்குங் காரணமானதே திர் சியரூபமாயா சத்தியென்றறிக. இனி அசத்து, சடம், துக்கம், அநித்தியம், கண்டிதமென மாயாலக்ஷண பஞ்சகமுண்டு. அவற் றுள், சசசிருங்க முதலானவை அசத்துரூபமாம், பாஷாணாதி களே சடரூபமாம், ரஜதமோமயமான புத்தியினுடைய குரோ தமூட விருத்தியாதிகமே துக்கரூபமாம் தோன்றிக்கெடுகிற தேகாதிகமே அநித்தியரூபமாம். காலபரிச்சேதாதிகமே கண்டித ரூபமாமென்றறிக.

இனிமாயாநிர்வாச்சியப் பிரகாரம், பின்ன, அபின்ன, பின் னாபின்னசத்து, அசத்து, சதசத்து, சாவயவ, நிரவயவ, சாவய வநிரவயவ, இவையல்லவென்பதே மாயாநிர்வாச்சிய நவப்பிரகார மாம். அந்தமாயையே சுருதிசம்பந்தஞானம், யுத்தி சம்பந்த ஞானம், லோகசம்பந்த ஞானமென்னும் ஞானத்திரயங்களுடனே கூடிக் கிரமத்தில், ககனகுசுமம்போலத்துச்சமென்றும் சுத்தி காரசிதம்போல, அநிர்வாச்சியமென்றும் ஆத்மனைப்போலநித்திய மென்றுஞ்சொல்லப்படுமென்றறிக. இனி, தமசு, மாயை மோ கம், அவித்தை அனர்தமென மாயாநாம பஞ்சகமுண்டு. அவற் றுள் சீவசைதன்னியத்தை மறைக்கையால் தமசென்றும், சகத் ரூபமான தன்னிதர தோற்றத்துக்குக் காரணமாகையால் மாயை யென்றும், அப்படித் தோன்றின சகத்தில் சுத்திகாரசிதாதி விப

ரீதமுண்டாக்கையால் மோகமென்றும், வித்தையினிடமாய்க்கெடு கையால் அவித்தையென்றும், சத்ரூபத்துக்கு அந்நியமாகையால் அனுர்தமென்றும் பெயராமென்றறிக. இனி, சங்கோச, விகாச மென மாயாதர்மத்துவயமுண்டு அவையெப்படியெனின், சித்திர படமானது, தன்பிரசாரணையால், நாநாவித சித்திரங்காண்பித் துச் சங்கோசத்தால் அந்த நாநாசித்திரமுமறையும். அப்படியே மாயை தன்விகாசதர்மத்தா லடங்கச்செய்யுமென்றறிக. இனி அசுவதந்திரம், சுவதந்திரமென மாயாகுணத்துவயமுண்டு. அவ ற்றுள், மாயை மித்தையாகையால் சத்ரூபசைதந்நியம் விட்டுத் தானகத் தோன்றுதலே அஸ்வதந்திரமாம். சாக்ஷிகனுமாய் அச ங்கனுமான ஆத்மாவைச் சீவாதிப்பிரபஞ்சமாகப் பண்ணுவிப் பதே சுவதந்திரமாம். மாயைமித்தையென்பது ககனகுசுமம் போலச் சர்வதாசூநியமல்ல சொப்பனதேகாதிகம்போலத்தோற்றி விசாரிக்க இல்லாதமித்தையே மாயையென்றறிக. இனி விசுத்த சத்துவரூபமாயைமலின சத்துவரூபமவித்தை, தமப்பிரதானரூபப் பிரகிருதியென மாயாவிர்த்தித்திரயமுண்டு. அவற்றுள், மாயை சுழுத்திலயங்களிலே பிரமத்துடனே அத்தியாசவைக்கியமா யிரு ந்து, பின் சாக்கிரசிருஷ்டியில் கிஞ்சித்துப் பேதாவஸ்தை யாம ளவில் அந்தப்பிரமசைதந்நியந் தன்னிடத்திற் பிரதிபலித்துத் தானே சர்வஞ்ஞபத்துவாதி குணவிசிஷ்டசைதந்நியனை ஈச்சுர னென்றும், பதிபதார்த்தமென்றும், பிரேரக விதாருவென்றுங் கொள்வதினல், அந்தஈச்சுரனுக்கு உபாதியாகிய அமோகாரணி யென்றுஞ் சொல்லப்படும். அவித்தை தன்னிடத்திற் பிரதி பிம் பித்து, போக்தாருக்களான பசுபதார்த்த சீவருக்கு உபாதியாகி மோககாரணி யென்றுஞ் சொல்லப்படும். பிரகிருதிபோக்கியாத் மகத்துவத்தாற் பாசபதார்த்தமென்றும் குணத்திரய சாமான்னி யாவஸ்தையால் அந்தவித்தையிற் பிரதிபிம்பித்தசீவருடைய போ கார்த்தமாய்ச் சகலகாரியமு மாகவேண்டி ஈச்சுரன் சந்நிதான லக்ஷணவீக்ஷணமாந்திரத்தில் விரிந்து முதற்காலதத்துவ முண் டாய், மேற்காலவசத்தாற் பரிணமித்து, மகதத்துவமாம், அந்த மகதத்துவமானது விதைத்துத் தண்ணீர்வார்க்க அங்குரமுமா காமல், பீசநிபாயமுங்காட்டாமல் உற்பின்னவஸ்தையை யடைந்த பீசம்போலக் காரணப்பிரகிருதியுமல்லாமல், காரியகங்காரமுமல் லாமல், மித்தியாக்ஞான நிர்விகற்ப சொரூபத்தால் மத்தியாவஸ்

தையாம், பின்னும் அந்தமகதத்துவத்திற் குணபேதமாய் மித்தியாக்ஞான விகற்பசொரூபமான பிரதமாத்தியாச மெனப்படுகிற மூலாங்கார முற்பத்தியா மென்றறிக. இனி, சத்துவ, ரஜ, தமமெனக்குணத்திரயமுண்டு. பிரகாசபிரவித்தி மோகமெனக்கிரமத்தில் சத்துவாதி குணரூபமுண்டு. தைஜசம், வைகாரிகம், பூதாதிகமெனச் சத்துவாதி குணங்களுக்குப் பரியாயநாமமாம். அவற்றுள் சத்துவகுணத்தில்-மனதாதி அந்தக்கரண சதுஷ்டயமும், சுரோத்திராதி ஞானேந்திரிய பஞ்சகமுந்தோன்றும், ரஜோகுணத்தில்-வாக்காதி கர்மேந்திரிய பஞ்சகமும் பிராணாதி வாயு பஞ்சகமும் உதிக்கும், தமோகுணத்தில் ஆகாசாதி பூதபஞ்சக முற்பத்தியாம், பின்பூதபஞ்சீகரண சம்மேளனத்தால் பிரமாண்டாபுவன சரீரகடாதி விஷைபங்களுண்டாம், அந்தமனமாதி அந்தக்கரணக்கிரமத்தில் விஷயங்களை நினைப்பது, நிச்சயிப்பது, அபிமானிப்பது, அவதரிப்பது, வியாபாரமாம், இதற்குச் சந்திரன், சதுர்முகன், க்ஷேத்திரக்ஞன், திரிபுராந்தகன் அதிதேவதைகளாம். இதயமே கோளகஸ்தானம் அந்தச்சுரோத்திராதி ஞானேந்திரியங்களுக்குக்கிரமத்தில் சத்தாதி விஷயங்களைக்கேட்டல், பரிசித்தல், பார்த்தல், ருசித்தல், மணங்கொள்ளுதல், வியாபாரமாம். இதற்குத்திக்கு மாருதம், இந்திரன், வருணன், அஸ்வினி, அதிதேவதைகளாம். காணாதிகளே கோளகஸ்தானம் சுரோத்திராதி ஞானேந்திரியங்களுக்குப் பாகியசத்தாதி விஷயங்களை யறிவதுபோலச் செவியை யங்குலியான் மூடப் பிராணவாயு சடராக்கினியிலுள்ள சத்தக்கரணம் அன்னபானோத்காரமாக, சீதஸ் பரிசகிரணம் நேத்திரத்தைமூட ஆப்பியந்தரதமோரூபகிரகணம், ஏப்பமாக ஆப்பியந்த ராசக்கிரகணம் வாந்தியாக ஆப்பியந்தர கந்தக்கிரகணம். இப்படி ஆப்பியந்தர சத்தாதி விஷயக்கிரகணமுண்டு. அந்தவாக்காதி கர்மேந்திரியங்களுக்குக் கிரமத்தில் சொல்வது, வசனிப்பது, நடப்பது, பிடிப்பது, விடுவது ஆனந்திப்பது வியாபாரம். இதற்கு அக்கினி, இந்திரன், ரவி, மிருத்தியு, பிரதேசன் அதிதேவதைகளாம். முகாதிகோளகஸ்தானம் அந்தக்கரண ஞானேந்திரிய கர்மேந்திரியமென்னும் பதின்மூன்கும், ஆதியாத்மிகமாம். இவற்றின் விஷயமே ஆதிபௌதிகம். ஆதிதேவதையே ஆதிதெய்வீகம் அந்தச்சந்திராதி தேவதைகளே விராட்புருஷன், அவனுடையதே தூலசரீரம், அந்தக்கரணேந்திரியாதிகமே இரணியகர்ப்பன் சூக்ஷ்மசரீரம் அந்தச்சரீரமே தமோரூபத்தால் அந்தரியாமிக்கு ஆவரணமாமென்றறிக.

சீவகாருணிய ஒழுக்கம்.

(திருவருட் பிரகாச வள்ளலார்.)

மலர் 1. இதழ் 6. பக்கம் 162-ன் தொடர்ச்சி.

பசுவென்பதென்னை? ஆவணம், மாயை, கன்மம் என்கிற மும்மலபந்தத்தா லொன்றுபட்டு அறிவிழந்த வான்மாவையே பசுவென்பது, அப்பசுவிற்கு விளக்கந் தோன்றுவது எப்படியென்னில்:- சூரியனை மறைத்த மேகவண்ணத்திலுள்ள விருளினிடத்துஞ் சூரியப்பிரகாச விசேஷந்தோன்றுதலா லவ்விருளும் விளக்கமாக வழங்குகின்றது. அதுபோல், அசுத்த மாயாகாரணங்களுந் தாமசகுணமு மிருள்வண்ணமுடைய வாயினுந்தம்மால் மறைக்கப்பட்ட பரசீவவிளக்க விசேஷத்தா லசுத்தமாயாகாரணமுந் தாமசகுணமும் விளக்கமாக வழங்குகின்றன. இதனுல் தாமசவாகாரத்தில் வரும் விளக்கம் அசுத்த மாயாகாரண விளக்கமே யென்றறியவேண்டும். ஆனுல் மரம் புல் நெல் முதலான தாபரங்களு முயிராகவே சொல்லப்படுகின்றதே, அவைகளை இம்சைசெய்து ஆகாரமாகக் கொண்டால் அவை தாமச வாகாரமல்லவோ அதனுல் வந்தசந்தோஷம் அசுத்த மனேகாரண சந்தோஷ மல்லவோஎன்னில்:- மரம் புல் நெல் முதலான தாபரங்களு முயிர்கள்தான், அவைகளை இம்சைசெய்து ஆகாரங்கொண்டால் அது ஏகதேச தாமச வாகாரந்தான். அந்த வாகாரத்தால் வந்த சந்தோஷமும் அசுத்த காண சந்தோஷந்தான். ஆனுல் அப்படியல்ல, மரம் புல் நெல் முதலான சீவர்கள் பரிசமென்கின்ற ஓரறிவையுடைய சீவர்க ளாதலாலும் அவ்வுடம்பில் சீவவிளக்க மொருசார் விளங்குதலாலும் அவ்வுயிர்கள் தோன்றும் வித்துக்களும் மற்ற வித்துக்கள்போல் சடமாதலாலும் அவ்வித்துக்களை நாமே விதைத்து உயிர்விளைவு செய்யக்கூடு மாதலாலும் அவ்வுயிர்களை வேறுசெய்யாமல் அவ்வுயிர்களினிடத்து உயிரில்லாம லுயிர் தோன்றுதற்கிடமான சடங்களாகத் தோன்றிய வித்துக்களையும் காய்களையும் கனிகளையும் பூக்களையும் கிழங்குகளையும் தழைகளையும் ஆகாரங்களாகக் கொள்வதேயன்றி அவ்வுயிருள்ள முதல்களை யாகாரமாகக் கொள்ளாதபடியாலும், அவைகளின் வித்து, காய், கனி முதலானவை கொள்ளும்போது சுக்கிலம் நகம் ரோமம் முதலியவைகளை வாங்கும் போது இம்சையுண்டாகாமைபோல் இம்சையுண்டாகாதபடியாலும், தாபரவர்க்கங்களுக்கு மனமுதலான வந்தக்காணங்கள் விருத்தியில்லாத படியாலும், அது உயிர்க்கொலையுமல்ல, துன்பமுண்டுபண்ணுவதுமல்ல, அதனுல் அதுசீவகாருணிய விரோத மாகாது, அந்தவாகாரத்தால் வந்த சந்தோஷமுஞ் சீவவிளக்க சகிதமாக கடவுள் விளக்கமே யாகுமென்றறிய வேண்டும்.

மாமுதலிய தாபரங்களில் தோன்றிய வித்துக்களை இனி உயிரோறு தற்கிடமாகிய சடங்களென்பது எப்படியென்னில்:- வித்துக்களில் சீவனிருந்தால் நிலத்தில் விதையாமுன்னமே விளையவேண்டும், நிலத்தில் விதைத்த காலத்துஞ் சிலவித்துக்கள் முளையாமலே யிருக்கின்றன, அன்றியும் வித்தென்பது-காரணம், இந்தக்காரணம் உடம்பு தோன்றுவதற்கே யென்று சிறுபிள்ளைகளாலும் அறியப்படும், அன்றி உயிர்நித்தியம் உடம்பு அநித்தியம், நித்தியமான வுயிர்காரணம் வேண்டாது. அநித்தியமாகிய வுடம்பே காரணம் வேண்டும், ஆகலின் வித்துக்களைச் சடமென்றறிய வேண்டும். ஆனால் வித்துக்களினிடத்து ஆன்மாக்கள் ஏறுவது எப்படியென்னில்:- நிலத்திற் கலந்த வித்துக்கு நீர்விடில் அந்தநீரின்வழியாகக் கடவுள் அருள் நியதியின்படி ஆன்மாக்கள் அணுத்தேகத்தோடுகூடி நிலத்திற்சென்று அந்நிலத்தில் பக்குவ சத்தியோடு கலந்து வித்துக்களினிடமாகச் செல்கின்றனவென் றறியவேண்டும். முளைகளையே பிடுங்கப் படாதென்று சிலர் சொல்லுகின்றார்கள். வித்து காய், இலை முதலியவைகளைப் புசிக்கலாமென்று சொல்வதெப்படியென்னில்:- வித்து, நிலத்திற் படிந்தபின் நீர்வழியாக வான்மாவானது சென்று பக்குவ சத்தியிற் கலந்து வித்திலேறி முளைத்தபடியால் முளையானது வித்துக் காய் முதலியவைகளைப்போலச் சடமல்ல, ஆதலால் முளைகளைப் பிடுங்கப் படாதென்பது உண்மையென் றறியவேண்டும்.

வித்து, காய், கனிமுதலியவற்றி லுயிர்க்கொலை யில்லாவிடினும் நகம், ரோமம், சுக்கிலம் முதலியவற்றிலிருக்கிற அசுத்த மாவ தில்லையோ வென்னில்:- தத்துவ விருத்தியும் தாதுவிருத்தியு மில்லாதபடியால் அசுத்தமுமில்லை. ஆகலில் மாம், புல், நெல் முதலியவைகளின் வித்து காய்கனி சழை முதலியவற்றைப் புசிப்பது சீவகாருணிய விரோத மல்லவென்றறியவேண்டும். மாமிசஆகாரம் புலிமுதலிய துட்ட மிருகங்களுக்கு நியதியாகார மல்லவோ வென்றறியவேண்டில், அது அவ்வுயிர்களுக்குச் சிருஷ்டி நியதிஆகாரமல்ல, பரம்பர வழக்கத்தாற்பெற்ற வாகாரமாமென் றறியவேண்டும். ஆகலின் அதை நிவர்த்திசெய்வித்துச் சத்துவ வாகாரங்களைப் புசிக்கும்படிச் செய்யவுங்கூடும்; ஒருசீல முடையவன் கிரகத்தில் வழங்குகின்ற பூனைக்கும் நாய்க்கும் வேறிடங்களிற் போய் அசுத்த வாகாரங் கொள்ளாமல் காவல்செய்து அடிநாள்தொடங்கிச் சுத்தவாகார வழக்கமே செய்விக்கின்றான். அவைக ளவைகளைப்புசித்து உயிர்வழங்கி வருகின்றன, அப்படியே புலி சிங்கமுதலிய துட்டவர்க்கங்களையும் மேல்நின்று சுத்தாகாரத்தில் பழக்குவா ரில்லாமையால் அசுத்தாகாரங்களைப் பழக்கத்தாற் புசிக்கின்றன வென்றறியலாம். ஆகலின் ஒருசீவனைக் கொன்று மற்றொரு சீவனுக்குப் பசியாற்றுவித்தல் கடவுளருளுக்குச் சம்மதமுமல்ல சீவகாருணிய வொழுக்கமுமல்ல வென்று சத்தியமாக வறியவேண்டும்.

இந்தச் சீவகாருணிய மென்கின்ற சாதனத்தில் சாத்திய மாகின்ற வின்பம் பரவின்பமென்றும் அபரவின்பமென்றும் இருவகைப்படும். இச்சை முதலியவைகளைப் பற்றியுண்டாகின்ற துன்பத்தை நிவர்த்திசெய்விப்பதில் வருமின்பம் அபரவின்பமாகும். அவை இம்மையி லனுபவிக்கின்ற வின்பங் களில் சிலவென்றறியவேண்டும். அவை யெவை யென்னில்:- உடுப்பதற்கு வஸ்திரமில்லாமலு மிருப்பதற்கு இடமில்லாமலும் உழுவதற்குநிலமில்லாம லும் பொருந்துவதற்கு மனைவியில்லாமலும் விரும்பியபடிச் செய்வதற்குப் பொருள் முதலிய வேறுவேறு கருவிகளில்லாமலுந் துன்பப்படுகின்ற சீவர் கள் விஷயத்தில் சீவகாருணியந் தோன்றி, உடுப்பதற்கு வஸ்திரம் இருப் பதற்கு இடம் உழுவதற்குநிலம் பொருந்துவதற்குப் பெண் விரும்பியபடிச் செய்வதற்குப் பொருள் முதலானவை கொடுத்தபோது, பெற்றுக்கொண் டவர்களுக்கு உள்ளிருந்து முகத்தினிடமாகத் தோன்றுகின்ற இன்பவிளக்க மும், அந்த இன்பத்தைக்கண்டு கொடுத்தவர்களுக் குண்டாகின்ற வின்ப விளக்கமுங் கடவுள்காரணத்தில் ஏகதேசமுஞ் சீவகரணத்திற் பூரணமாகத் தோன்றுகின்றவை, ஆகலால் அபரவின்ப மென்றறியவேண்டும். பசியினல் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வருவின்பம் பரவின்பமாகும் அவை இம்மையில் போக சத்திகளாலும் யோக சித்திகளாலும் ஞான சித் திகளாலும் வருகின்ற இன்பங்களும் முடிவில் அநுபவிக்கப்படும் மோட்ச வின்பமு மாகுமென் றறியவேண்டும்.

அன்பு.

மலர் 1. இதழ் 6. பக்கம் 166-ன் தொடர்ச்சி.

நாம் நமதன்பை அறிவின் பான்மையிற் செலுத்துவோமாக என்று சென்ற ஆறுமிதழில் முடித்திருந்தோம். ஆதலின் இப்போது அறிவின் பான்மையைப்பற்றி விசாரிப்போம். அறிவானது இயற்கையறிவு செயற் கை யறிவு எனஇருவகைப்படும். அவற்றுள் இயற்கை யறிவானது தனக் குத்தானே இடைவிடா விசாரஞ்செய்வதால் உண்டாகும் அறிவு. செயற் கை அறிவானது சமயமத நூல்களின் விசாரணையால் உண்டாகும் அறிவு இவ்விரண்டில் முதலாவதுயிர்க்குதவி, மற்றதுடற்குதவி. உயிரானதுஎன்று மொருபடித்தா யெக்காலத்தும் விளங்குந் தன்மையவாதலின் அவ்வுயிர்க் குதவியாகிய அறிவே மிகவும் பாராட்டற்குரியது. உடல் எத்தனையோ வுடலிலிதுவு மொருஉடலாதலால் இவ்வுடற்குதவி செய்தற்கேற்ற அறிவு அவ்வளவு சிறப்புடையதன்று. ஆயினும் உயிரும்உடலும் ஒன்றை யொன்று பற்றி விளங்குந் தன்மையவாதலின் அவ்வறிவு மொன்றை யொன்று பற்றி நிற்கின்றது. உயிரின் நன்மைக்காகவே கடவுளால் உடல்யேற்பட்டிருப்பது போல இயற்கை யறிவின் விளக்கத்திற்காகவே செயற்கையறிவும் விளங்கு கின்றது. இச்செயற்கையறிவு மியற்கையறிவும் பெற்றவர்களுக்கு முன்பாக

நிற்குமறிவுகள் யாவுள, இயற்கையறிவானது தனக்குத்தானே யின்பத்தை யளிக்கும். செயற்கை யறிவானது பிறர்க்கு அலங்காரமாக வெடுத்துச் சொல்லி இன்பத்தைவிளைவிக்கும். இதனையே இம்மை மறுமை யென்றுஞ் சொல்லலாம். இம்மறுமையாகிய இயற்கை யறிவைப்பெறாத செயற்கை யறிவோர் பிறர்க்குபகாரமாகிய ஏணியைப்போலவுந் தோணியைப்போலவு முதவுவார்களேயன்றித் தன்னிலின்பத்தை யடையார். தன்னிலின்ப மடையும் இயற்கை அறிவோர் பிறர்களை யேத்த யிரக்கச்செயற்கை யறிவில்லாததால் பிறர்க்குபகாரியாயிருக்க வறியார். இவ்விருவகை அறிவையும் பெற்ற மகானுபாவர் திருவருட் பிரகாச வள்ளலார். இவ்வியற்கையறிவை விளக்குவதற்கு சாகாக்கல்வியென்றும், பக்தியென்றும்பெயராகும். சாகாக் கல்வியென்பது திருவள்ளுவரார் செய்த திருக்குறளின் முதலதிகாரத்திலே சொல்லப்பட்டிருக்கிறதென, ஸ்ரீமத்வள்ளலார் கூறியிருக்கின்றார், அவ்வாறு திருக்குறளின் முதலதிகாரத்திற் சொல்லிய தென்னையெனின் எழுத்துக்களுக்கெல்லாம் அகரமுதலாவதுபோல உலகத்துக்கெல்லாங் கடவுள் முதன்மையாவார் என்பதாம். அகரஉயிரானது எழுத்துக்களுக்கெல்லா முதன்மையாய்த் தனித்திருப்பதோடுங்கூட ஒவ்வொருஎழுத்துக்களினுள்ளேயும் அகாவுயிரேறி சப்திக்கின்றதுபோல, உலகத்திலேயுள்ள சகல சீவராசிகளுக்கும் முதன்மையாய்த் தனித்துநின்றும், அகாவுயிரெழுத்து மற்றைய எழுத்துக்களிற் கலந்து நிற்பதுபோல கடவுளும் ஒவ்வொரு சீவர்களிடத்திலுங்கலந்து நின்றுவிளங்குகின்றாரென்பதைக் காட்டியிருப்பதோடும், அவரைக்காணுமுபாயமுங் காட்டியுள்ளார். அதாவது

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ
னற்றாடொழா ரெனின்"

இதன்பொருள் உண்மையறிவினனுடைய நல்லபாதத்தை வணங்காதவர்களானாற் கருவிநூல்களையும் ஞானநூல்களையுங் கற்றுக்கொண்டதனாலென்ன பயனுகும் என்பதாம் இதில் நாம் அறிந்துக்கொள்ளுவதென்னவென்றால் உண்மையறிவுடையவனை அதாவது இயற்கை யறிவாளியை யறிவதற்காகவே கல்வியேற் பட்டிருக்கிறதாக நன்கு விளங்குகின்றது. அவ்வாறு இயற்கையறிவைப் பெறாதவரையில் கற்றோர் கற்றோராகமாட்டார். ஆதலால் அவ்வியற்கையறிவைப் பெறுதல் எதனாற்கூடுமெனின். இயற்கையறிவுடையவன் பாதம் வழிபடுதலா லுண்டாகு மென்க. அஃதென்னையெனின், பாதத்தைவிட மேலான அவயவங்களெல்லாமிருக்க அந்தஅவயவங்களை யெல்லாம் விட்டுவிட்டு பாதமென்ற உறுப்பிலுள்ள விசேஷ மென்னவென் றாலோசிக்கின் பாதத்திலே இயற்கையாகவே பிரகாசம் விளங்குகின்றது. உள்காலென்றும்பெயர். உள்ளேயுள்ள பொருளை அறிய வேண்டுமானல் உள்ளேயுள்ள மனிதரைக்கொண்டு அறியுமாறுபோல உள்ளேயுள்ள இயற்கை யறிவைக்காணுதற்கு உள்ளங்காலைக் கொண்டு உபா

யமாகத் தெரிந்துக்கொள்ளலாமென்றே நமதான்றோர்களெல்லாம் உள்ளங் காலைச்சிரசில் சூட்டிக்கொள்வதும் சிரசில்சூட்டச்சொல்லி வேண்டுவதும் ஆசாரியர் திருவடியை சிரசிற்சூட்டித் தீட்சைசெய்வதும் இப்பொருளி னுண்மையைக்கருதியேயாம். இதுபற்றியே ஸ்ரீமத்வள்ளலார்

"ஆடவெடுத்தா னென் றன்றகின்றீரென்றலைமேல்
சூடவெடுத்தா னென்று சொல்கின்றேன்—நாடறிய
இவ்வழக்கை யார்பாலிசைத்தறுத்துக் கொள்கிற்பாம்
கவ்வையற்ற வம்பலத்தான் கால்,,

எனக்கூறியிருக்கின்றனர். அன்றியும்,

"இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான்றாள்வாழ்க,,

என மணிவாசகப் பெருமானும்

"ஒளியிட்டதாளினை யுள்ளேயிருத்துவ துண்மையென்று
வெளியிட்டடைத்துவைத்தேன்,, என பட்டணத் தடிகளும்
"மலர்க்காலென் சென்னி மிசை வைத்திடாயோ,,

எனத்தாயுமானவரும் இன்னமும்பல ஆன்றோர்களும் திருவடிப்பெருமை யைப் பற்றிக் கூறியுள்ளார்கள். நாமும் திருவடிப் பெருமையுடையதுதான் என்று தொட்டுதொட்டு கும்பிட்டுக்கொண்டிருப்பதாற் பயனென்னை, நோயுள்ளானொருவனுக்குச் சிகிச்சை செய்யுங்கால் அச்சிகிச்சையின்படி சுக்கை அரைத்துக் குழப்பி உள்ளுக்குக் கொடுத்தால் நோய்தணியுமென் றிருக்க அச்சுக்கைக் கண்டகாலத்திலாவது அதைக் கண்ணிலொத்திக் கொண்ட காலத்திலாவது சதாமேலே பூசிக்கொண்டாலாவது நோய்தணி யுமா? தணியாது. பின்னை யெப்படித்தணியும், மருந்தை உள்ளுக்குட் புசித்தால்தான் நோய்நீங்கும். அதைப்போல அறியாமையாகிய நோய் நீங்கவேண்டுமானால் அறிவாகிய மருந்தை உட்கொள்ளல்வேண்டும். மருந்து உள்ளே செல்லவேண்டியதற்காக வோர்குழாயைக்கொண்டுத் தந்திரமாகச் செலுத்துவதுபோலத் திருவடியைக்கொண்டு தந்திரமாக இயற்கை விளக் கத்தை உண்டுபண்ணுதற் கூடுமென்பதையே திருக்குறளிற் காட்டிய உண்மையாதலால் அதனையே ஸ்ரீமத்வள்ளற்பெருமானும சாகாக்கல்வி யென வற்புறுத்தி கூறியருளினர். உண்மைவிளக்கத்தைப் பெறவேண்டிய தற்கே இவ்வுபாயம் வேண்டுமேயொழிய உண்மை அறிஞர்களுக்கு வேண் டுவதின்று. ஆயினும், மற்றையோர் நன்மையைக்கருதி அவ்வாறு பாவனை செய்வதுபோற் காட்டுவர். அப்படிக்காட்டுபவரைப் பின்பற்றி மற்றை யரும் அவ்வுண்மை விளக்கத்தைப் பெறுதல் வேண்டுவது அத்தியாவசி யமானது. ஸ்ரீமத்வள்ளலார் ஓதாதுணர்ந்தஅறிஞர் என்றும் பெயர்பெற்றவர் அப்பெருமானார் இயற்கையாகவே விளங்கும் ஆண்டவனிடத்திலே உங் களை தன்மைச் செலுத்துவீர்களேயானால் நீங்கள் மரணமில்லாதவாழ்வை அடையலாமென்ற போதனையை நமக்குப் போதித்திருக்கின்றார். நாம்

ஆராய்ந்து பார்க்குமிடத்து நமதுதேகமானது புழுக்களும் நோய்களும் நிறைந்த ஓர்அற்பமாகிய கூடாயிருக்கின்றது. இத்தேகத்தினிலைமையும்மிகுந்த அபாயகரமாகத் தோற்றுகின்றது. இத்தேகத்தி னியல்பைப்பற்றி ஸ்ரீமத் வள்ளலார், தெய்வமணிமாலை (கஎ) பாசுரம்.

உப்புற்ற பாண்டமென வொன்பது துவாரத்து ளூற்றசும் பொழுகுமுடலை
வுயர்கின்ற வானிடை யெறிந்தகல் லென்றுமலை யுற்றிழியு மருவியென்றும்
வெப்புற்ற காற்றிடை விளக்கென்று மேகமுறு மின்னென்றம் வீசுகாற்றின்
மேற்பட்ட பஞ்சென்றும் மஞ்சென்றும் வினைதந்த வெறுமாய வேடமென்
[றும்
கப்புற்ற பறவைக் குடம்பையென்றும் பொய்த்த கனவென்றும்நீரிலெழுதும்
கைபெழுத் தென்றுமுட் கண்டுகொண் டதிலாசை கைவிடே னென்செய்கு
[வேன்
தப்பற்ற சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி சண்முகத் தெய்வமணியே.

எனக் கூறியிருக்கின்றார். ஆதலால் நாம் இத்தேகத்தையே நித்திய தேகமாக்க வேண்டிய அவசியத்தைக் கவனித்தல் வேண்டும். நித்திய தேகமாக்குதல் எந்தவகையாற் கிடைத்தற் கூடுமென்னில் எல்லாம் வல்ல ஆண்டவனிடத்தி லுள்ளபடியே நமதன்மைச்செலுத்தி முறையிட்டாற் கிடைக்குமென ஸ்ரீமத் வள்ளலார்,

காற்றாலே புவியாலே ககனமதனாலே கனலாலே புனலாலேல் கதிராதியாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவியாலே கோளாலே பிறவியற்றுங்
[கொடுஞ்செயல்களாலே
வேற்றாலே யெஞ்ஞான்று மழியாதே விளங்கு மெய்யளிக்க வேண்டுமென்
[றேன் விரைந்தளித்தானெனக்கே
யேற்றாலே யிழிவெனநீர் நினையாதீருலகீ ரெந்தையருட்பெருஞ்சோதி
[யிறைவனைச் சார்வீரே எனவும்
சாவ தென்றும் பிறப்பதென்றஞ் சாற்றுகின்ற பெரும்பாவம் தன்னை
[யெண்ணி
நோவ தின்று புதிதன்றே யென்றுமுளதா லிந்த நோவைநீக்கி
ஈவது மன்றிடை நடிப்போய் நின்னாலே யாருமற்றை யிறைவராலே
யாவதொன்று மில்லை யென்று லந்தோ விச்சிறியேனு லாவதென்னே.

எனவுங் கூறியிருக்கின்றார். ஆதலால் நாம் மரணபயத்தை நீக்கிக்கொள்ளாது வாழ்வதால் என்னபயன். இப்பயத்தை முன்னால் நீக்கிக்கொண்டல்லவா நாம்வாழ்க்கையை நடாத்துதல் வேண்டும். இம்மரணபயத்தை நீக்குதற்கான முறையிற்பழகுவது மிக்க அசாத்தியமாகுமே என்செய்வது என்று கலங்க வேண்டுவதேயில்லை. இதற்காகத் துறவுவேண்டியதுமில்லை. முதலிலே யாமுரைத்தபடிக் கிடைவிடா விசாரஞ்செய்தலே போதுமானது. அவ்விசாரஞ் செய்தற்குரிய ஓர் சன்மார்க்க சங்கமும் அத்தியாவசியம்.

அஃதுட னச்சங்கத்தின் சார்பாக வோர்சஞ்சிகை நமக்கடிக்கடி ஞாபகத்தை யூட்டிக்கொண்டே வருவதற்கோர் உற்றதுணைவனுகும் இதைவிட வேறே கஷ்டப்படும்படியான வழியில் நம்மைக்கடவுள் செலுத்தவில்லை.

இதனையே ஸ்ரீமத் வள்ளலார்
ஆளுடைய பிள்ளையார் தோத்திரம்.

செவ்வகை யொருகாற் படுமதியளவே செறிபொறி மனமதன் முடிவி
லெவ்வகை நிலையுந் தோன்றுநீ னினக்கு ளெண்ணிய வெண்ணியாங்கெய்து
மிவ்வகை யொன்றும் வருத்தமில் வகையென் றெனக்கருள் புரிந்தசற்குரு [வே
தெவ்வகை யமண விருளற வெழுந்த தீபமே சம்பந்தத்தேவே. எனவும்

நெஞ்சறி வுறுத்தல். ௬௨௩-௬௨௬

எவ்வா றிருந்தா லியலுமெனி லம்ம
விவ்வா றிருந்தா லியலாதால்—செவ்வாற்றிற்
பற்றற்றான் பற்றினையே பற்றிடல் வேண்டுமது
பற்றற்றாலன்றிப் பலியாதால்—பற்றற்றல்
வேதனையா லீற்கு விரியும் சகப்பழக்க
வாதனைபோய் நீங்கிலன்றி வாராதால்—வாதனையும்
ஈனமந்தோ யிவ்வுலக மென்றருளை நாடுகின்ற
ஞானம் வந்தா லன்றி நலியாதால்—ஞானமது
போகமுற்றும் பொய்யெனவே போது மனித்தியவி
வேகமுற்றாலன்றி விளங்காதா—லாகவஃ
துண்ணவந்தாற் போலுமிவ ணுற்ற விசாரித்திடுமோ
ரெண்ணம் வந்தா லன்றி யிசையாதா—லெண்ணமது
பங்கமடைந்தா ரவையைப் பாராது சாதுக்கள்
சங்க மடைந்தா லன்றிச் சாராதால், எனவும்

வர்க்கமாலை-யென்னும்-காலைப்பாட்டு. (௧௧)

ஓடாது மாயையை நாடாது நன்னெறி
யூடாதிரு வென்றீர் வாரீர்
வாடாதிரு வென்றீர் வாரீர்

எனவுங் கூறியிருக்கின்றார். ஆதலின்,

இயற்கை விளக்க நிறைவாகியுள்ள ஞானசபையே நமதறிவாதலால் அவ்வறிவு நாமாதற்குரிய விசாரத்தை நாமடையவேண்டும். இவ்விளக்கத்தை நாம் பெறுதவரையில் நாமுய்யவும் நம்மக்களை உயர்வுபடுத்தவும் நம்மாலியலாது. நாமடிமைக் குழியில் நின்றுந் தப்புவித்தல் முடியாது. நம்மாலடக்கியாளும்படியான தேகமானது நம்மை அடக்கியாளுதற் காண்கின்றோம். இதைப்போலவே விடயபோகங்களும் நம்மை அடக்கியாளுகிறது. உலகமின்னதன்மையுடைய தென்றறியாத நம்மால் உலகத்துக்குபகரிக்க வெப்படி முடியும். இதுபற்றியே ஸ்ரீமத் வள்ளலார்,

சுகமறியீர் துன்பமொன்றே துணிந்தறிந்திருலகீர்
    சூதறிந்தீர் வாதறிந்தீர் தாய்மையறிந்திலரே
இகமறியீர் பரமறியீரென்னே நுங்கருத்தீ
    தென்புரிவீர் மரணம்வரி லெங்குறுவீரந்தோ
அகமறிந்தீ ரனகமறிந்தழியாத ஞான
    வமுதவடிவம் பெறலாம டைந்திடுமினீண்டே
முகமறியார் போலிருந்தீ ரென்னையறியீரோ
    முத்தரெலாம் போற்றுமருட் சித்தர்மகனே.

எனக் கூறியிருக்கின்றார். நாம் வர்சஞ்செய்யுமுலக வின்பத்தை யடைய வேண்டியதற்கே நம்காலமெல்லா மிழந்தோமானால் முத்தியின்பத்திற் குழைக்கக் காலமேது, நம்முடைய தேகம் முத்தியின்பத்திற்கே யுரியது. அவ்வின்பம் பெறுதற்பொருட்டே கடவுளாற்கொடுக்கப்பட்ட தென்றறிந் தும், அவ்வின்பத்தைப் புறக்கணித்து நாம்பாக்கில் வீணே நம் வாழ்நாளை யிழக்கின்றோம். நமக்குரிய இம்மை மறுமை யின்பத்தை யளித்து இமைய ளவு நேரமும் பிரியாமல் அறிவுக்கறிவாயிருந்து காப்பாற்றும்படியான ஆண் டவனிடத்து நமதன்பைச் செலுத்த வறியாது வீணே முடிவுபெறாத நிலை களில் நமதன்பைச் செலுத்தி இருமையுமிழக்கின்றோம். இதுபற்றியே,

பொருட்டல நம்போகமெலாம் பொய்யா மிங்கிதுநான்
    புகலுவதெ னுடொறுநும் புந்தியிற்கண்டதுவே
மருட்டுலகீ ரிருட்டுலகில் மடிவ தழகலவே
    மரணமிலாப் பொருவாழ்வில் வாழவம்மி னிங்கே
பொருட்டிறஞ்சேர் சுத்தசிவ சன்மார்க்க நிலையில்
    பொருந்துமின் சிற்சபையமுத மருந்துமி னன்புடனே
அருட்டிறஞ்சேர்ந் தெண்ணிய வாறுடு மினேறுதம்மை
    யடுப்பவரேயன்றி நின்று தடுப்பவர் மற்றிலையே.

எனக் கூறியிருக்கின்றார். நாம் எண்ணியவா றெண்ணியவாறு எண்ணங்க ளெல்லாம் முடித்துவைக்கவும், நாம் ஆனந்தக்கூத்தாடவும் நம்மை ஒருவ ரும் தடுப்பவரின்றி யாவரையும் நம்மை யடுத்தவராக்கவும் வேண்டிய உண் மை நெறிகளைக்காட்டிப் போதித்துவந்த பெரியார்வாக்கை நாம் பாராட்ட வேண்டாமா? அம்முறையிலடங்கி நடந்தாவல்லவோ நாமின்பத்தை யடைய லாம். "வெறும் புளிதின்று நாக்கெறிவெடுப்பது,, போல நாம் கடவுளினெ றியை விட்டுச் சேய்யும் செய்கைகள் மாயாசாலக் செய்கைகளே யாகும். நம்பெரியார் காட்டிய இயற்கையறிவை விளக்குஞ் சுத்தசன்மார்க்கத் திரு நெறியில் நமதன்பை வளர்ப்போமாக. (தொடரும்.)

சித்தார்ணவம்.

சாமீகரவித்தையென்னும் ஹேமவித்தை

சீகாழி பிரமஸ்ரீ,

நாராயணசாமி அய்யரவர்கள் (*India Chemist*)

மலர் 1. இதழ் 6. பக்கம் 175—ன் தொடர்ச்சி.

ரஸகுளிகைகளின் ஸாதகத்தால் அஷ்டமகா ஸித்திகளைப்பெற ஆனந்திக்க சச்சிதானந்தஸ்வரூபத்தில் லயித்துநிற்க, ராஜயோக மார்க்கம் ஆகிய பிரமவித்தையென்றும் நான்கு வகுப்புகளாகவகுத்து, நான்கையும் ஒன்றேடொன்று அனுமித்து பின்னற்கோர்வை போல் கோத்து இருக்கிறார்கள்.

தற்காலத்திலோ ஒருவரை மற்றொருவரும் ஒருதேசத்தை மற்றொருதேசமும் கவளீகிருதம்செய்ய ஸாதனமாக இருக்கும்Chemical art எனப்படும் Destuchful ரஸாயன வித்தையை வயிற்றுச் சோற்று வித்தையாகக் கொஞ்சம் கொஞ்சம் தெரிந்துகொண்டு தம் போல் கற்றவர்கள் இல்லை யெனத் தன்னைத்தானே மதித்துக்கொண்டு பிறர் ஒவ்வொருவரும் வித்தையிலும் தனத்திலும் தன்னைவிட மற்ற எல்லோரும் தாழ்ந்தவர்களென மதித்துக்கொண்டு நம்முடைய ஸித்தர்கள், ரிஷிகள், முனீஸ்வரர்கள் எல்லோரும் நம்முடைய வித்தையை மறைத்துப் போய்விட்டார்கள் எனக் குற்றம்சாட்டி நாம் காலங்கழித்துவிடுகிறோம். அவர்கள் இப்படி கோவையாய் எழுதிவைத்துப்போன சாஸ்திரத்தை அறிந்துகொள்ளக்கூடச்சக்தி இல்லாமலும் பிரக்ஞை இல்லாமலும் நாம் போயினேமே யென்ற தாபத்துடன் ஆராய்ந்து பார்க்க முயல்வதுகூடயில்லை. எவராவது முயன்று சிரமஸாத்தியத்தால் அறிந்துகொண்டு முன்வந்தால் அவர்களையும் அவர்கள் வார்த்தைகளையும் நம்பாமல் தங்கள் மட்டில் தனக்குப்பாரக்கணக்கில் செய்துகொடுத்துப்போகும்படி பரிகசித்து தன்னைப்போலவேயும், தன்னைக்காட்டிலும் பெரிய யோக்கியதை இல்லாதவனுகவே மதித்து முழங்கையால் இடித்துத் தள்ளுவது போல் அனுப்பிவிடமாத்திரம் தெரிந்து கொண்டிருக்கின்றார்கள்.

இப்படிக்கொத்த மகனீய வித்தையை நம்ஸித்தர்களோவெனில், வெள்ளையாயும் தெளிவாயும் தினம் பேசிப்பழகும் பாஷையில்

எளிதான நடையில் நமக்குப் பெரும் வித்யாதனமாக விட்டுக்கொடுத்துப்போயிருக்கிறார்கள். நம்முடைய தற்கால கலாசாலைகளின் படிப்பின் திட்டமோ என்றால் நம்மைநாம் அறிந்துகொள்ளக்கூடிய நிலைமையில் இல்லாததாயும் நமக்கு உள்ளும்புறம்புமாக எங்கும் பரிபூர்ணமாய் அடங்கிநிற்கும் பரம்பொருளை அறியக்கூடாமையான உயர்ந்தபடிப்பாக அமைத்துக்கொடுத்திருப்பதை உத்தேசித்துக் காலநிலைமை இப்படிக்கு ஆயிற்றேயென நம்மைநாமே நிந்தித்துக் கொள்ளவேண்டி இருக்கிறது.

கொங்கணர்:-

"நிலைத்திட்டால் காயசித்தி யோகசித்தி நேரான வர்தசித்தி
குலைத்திட்டால் மாயசித்தி வந்துகூடும்
குழைந்து அலைவான் பிறவியிலே கூடமாட்டான்
அலைந்திட்ட பேய்மனது அண்டோட்டாது.

இவ்வளவு ஸித்திகளையும் தன்னுள் அடையச்சொன்னது தமிழ்நாட்டுச்சித்தர்களின் நூல். இதைத்தெருத்தெருவே போடவில்லையென்று அவர்களே சொல்லி இருக்கிறார்கள். இவ்வளவு சித்திகளையும்பெற ரஸத்தை வதைத்தால்தான் உண்டு. ரஸத்தை வதைத்தோனுக்கு ரஸவாதியெனப்பெயர் ரஸத்தை வதைக்காவிடில் யாதொன்றும் ஆகாது. இந்தச்சாஸ்திரத்துக்கும் ரஸவாத சாஸ்திரமெனப்பெயர். உப்புவாதம், பாஷாணவாதம், உபரஸவாதம் எனப்பெயரிடவில்லை. ரஸத்திற்கு ஈசன் விந்து: ஹரவிந்து, ருத்திர வீரியம் எனவும் பெயர். சட்டைநாதர் தம்நூல் வாதகாவ்யம் ஆயிரத்தில் சொல்லியிருப்பதைக் கவனிக்கவும்:—

"விந்துஎன்ற சூதத்தில் மந்திரமோ ஸித்தி கவனத்தில் ஓடுகின்ற குளிகைசித்தி அந்துவென்ற யோகமுதல் ஞானசித்தி அப்பனே காயசித்தி யோகசித்தி தந்துவென்ற ஜடத்துக்குள்ளாகும் ஸித்தி சாஸ்திரத்திற் சொல்லாத கருவோஸித்தி பந்துகொண்ட வாதத்தில்அஷ்டாங்கஸித்தி பாரப்பா சூதத்தைக்கட்டினோர்க்கே.

கட்டினாற் பொன்னுமுண்டு கட்டாவிட்டால்
பொன்னுமில்லை கெட்டுநான் கிழிந்தேனென்று
கெடவேண்டாம் மூடாகேளே"

"கேளுநீ வாதப்பெருங் கெடுரசவாதந்தானே" (கொங்கணர்)

ஆசார சீர்திருத்தமென்னும் நூதன அபிப்பிராயம்

சீகாழி.

பிரமஸ்ரீ, M. S. இராஜகோபாலையர் அவர்கள் B. A; L. T.

(மலர் 1. இதழ் 6. பக்கம் 177-ன் தொடர்ச்சி)

விதவா பரிணயம் என்பது மாதர்களும், புமான்களும்ஆமோதிக்க முடியாதவிஷயம். இதன்தத்துவத்தைச்சற்று விசாரிப்போம். விவாககாலத்தில் ஒருஸ்திரீ "நான்சுகதுக்கங்களிலும் உன்னுடனே வாழ்வேன்; உனக்கு நம்பிக்கையுள்ளவளாயிருப்பேன். வேறுபுருஷனை மனதினாலும் ஸ்மரியேன்,, எனத்தன்கணவனைப்பார்த்துஉறுதிமொழிகூறுகின்றாள். வேதத்தில் உபநிஷத் பாகத்தில் மானுடஜன்மங்களைப் பார்த்து ஸத்குரு "சத்தியத்தைச்சொல்லுங்கள், தர்மத்தைச்செய்யுங்கள், சத்தியத்தினின்றும் எள்ளளவும் நகராதேயுங்கள்" என உபதேசிக்கிறார். ஆகவே ஆரியர்கள் ஸத்தியத்தைப் பெரிதாக எண்ணுகிறவர்கள். அக்கினிசாட்சியாக,சமஸ்ததேவதைகள், மனிதர்கள் முன்பாகக்கூறப்பட்டவார்த்தைகளை அலட்சியம் செய்வது ஆரியதர்மமல்ல. விதவைகளே கணவனிறந்தபிறகு புனர்விவாகம் செய்துகொள்ள இச்சிக்கிறதில்லை. புருஷர்களும் அதை ஆமோதிக்கிறதுமில்லை. பரமகாமுகியா யிருந்தால் ஒழிய மறுபடியும் ஒரு ஆர்யஸ்திரீ விவாகம் செய்துகொள்ளாள்.

ஸ்ரீமத் ராமாயணத்தில் சீதாபிராட்டி மூலமாக வால்மீகிமகாமுனி ஸ்திரீதர்மத்தை உபந்நியாசித்திருக்கிறார் ஜனகமகாராஜன் ஸ்ரீராமபிரானிடம் பாணிக்கிரகண காலத்தில் சீதையை ஒப்புவிக்குங்கால், "இவள் சீதா, எனதுபெண், உனது தர்மானுஷ்டானத்திற்குக் கூடவிருந்து உதவிபுரிய யோக்கியதையுடையவள்,இவளது கையைப்பிடித்து இவளைமனைவியாக அங்கீகரித்துக்கொள்" என்றார். மேலும், இவள் ஒருவனை அவன் நிழல்போல், உன்னை விட்டகலமாட்டாளென்று முரைத்தார். ஆகவே,ஒருபார்யை, தன்னிழல் தன்னைவிட்டகலாததுபோல், கணவனைவிட்டகலக்கூடாது. ஏனெனில், அவனது கர்மானுஷ்டானத்திற்கு இவளே காரண பூதையாயிருக்கிறாள். ஸ்திரீ புருஷ தாம்பத்யம், ஒருமனிதனும் அவனது சாயையும்போலிருக்கவேண்டியது.

(தொடரும்)

பிராணனும் அதைக்காப்பாற்றும் வழியும்.

இல்லையாளி, ஸ்ரீமான் N. தம்பியப்ப செட்டியார் அவர்கள்.

(மலர் 1 இதழ் 6 பக்கம் 173-ன் தொடர்ச்சி)

இவை இங்ஙனமாக நாம் எடுத்துக்கொண்ட மகுடத்திற்கேற்ப அதற்காதாரமாயிருக்கின்ற பிராணுதாரமான சுவாசத்தை தன் விருப்பப்படி நடந்தேறச் செய்யும் சாதனத்திற்கு யோகமென்று பெயராகினும், சீவாத்மாவைப் பரமாத்மாவோடு ஐக்கியப்படச் செய்தலே யோகமென்றும் ஒருசாரார்கூறுவர். அஃதொருவாறுக நிற்க யோகிகள் தங்களுக் தங்களுக்குரிய சாதனத்தைநிகழ்த்தும் பொருட்டு சந்தடியில்லாத குகையினையும் கல்லறையினையுந் தனித்த விடத்தினையுந் தேடிச்செல்லுவர். அறுசுவைபிலிச்சையின்றி பாலன்னமுண்டு காயத்தைநிலைக்கச்செய்து பகற்காலங்களில் நித்திரை செய்யார். மனிதருடைய பார்வைக்கு மறைவாக யிருப்பார். மிருதுவாக நடப்பார், மிதமாக வார்த்தையாடுவர். மிதநித்திரை செய்வார். லாகிரிவஸ்துக்களை எப்வகையிலும், எவ்விதத்தும் உபயோகப்படுத்தமாட்டார். வயிராக்கியத்தை உடையவருயிருப்பர். பத்மாசனம், சித்தாசனம் இவ்விரண்டிடையேனும் அல்லது இவ்விரண்டிலொன்றையேனும் அப்பியாசித்தபின்னரே பிராணுயாமத்தை செய்யத்தொடங்குவார். சிலர் ஆகாரவிஷயத்தில் அறுசுவைகளின் விருப்பத்தை நீக்கி சத்துவ குணமுள்ள ஆகாராதிகளை அரைவயிற்றிற்குண்டு கால்வயிற்றைச் சலத்தினுலும் கால்வயிற்றை வாயு சஞ்சரிக்கவும் இடந்தேடிக்கொள்வர். தேகப்பயிற்சி யுள்ளவர்களுக்கு சுவாசப்பயிற்சி வெகு எளிதாக கைகூடும். இதனுல் தேகதிடமுள்ளவர்களே சுவாசப்பயிற்சியை அனுசந்தரினஞ் செய்ய உரிமையுள்ளவர்களென்பதைக்காட்ட தாயுமானுரும் "யோகத்திலே சிறிது முயலவேன்றல் தேகமோவ்வாது" எனக் கூறியுளார். தேகப்பயிற்சியால்வரும் ஆற்றலுக்கு மிருகசக்தி யென்றும் யோகப்பயிற்சியால் வரும் ஆற்றலுக்கு தெய்வீகசக்தியென்றும் பெயர். மக்களாகப்பிறந்த நம்மில் சிலர் தேகப்பயிற்சியைப்பெற்று அதன்பலத்தால் மிருகத்தைப்போல பாரவண்டிகளை யிழுக்கவும் மோட்டார்நிறுத்தவும் பெரும்பாரமுடைய கல்லொன்றை மார்பிற்றுங்கி துகள் துகளாக உடைத்தெரியக்காண்பதும், இருப்புச்சங்கிலிகளை அறுத்தெறிவது

மாதிய மிருகபலத்திற்குரிய தொழில்களைச் செய்ய சக்தியுள்ளவரா கக்காணப்படுகின்றார்கள். யோகத்தினால் அடையும் சக்தியினாலோ மனிதர் தங்களுடைய தேகத்தை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளுவதுபோல பிறருடைய தேகத்திலுள்ள நோய்களையும் வாதைகளையும் போக்கி ஆரோக்கியமான நிலையில் வைப்பதற்கு தகுதியுடையவராவர். அம்மட்டோ! அளவிறந்தபல அற்புதசித்திவல்லபத்தோடுங்கூடி உலகத்தாரால் எண்ணவும் தியானிக்கவும் கூடிய நிலைமையினை உடையவராகவும் இருப்பர். யோகியாகவேண்டியவர் அல்லது பிராணனைக்காப்பாற்ற விருப்பமுடையவர் தங்கள் இளமைப் பருவத்திலேயே, சரீரங்கெடாமலிருக்குங் காலத்திலேயே, இந்திரியம் நஷ்டமாகாததற்கு முன்னதாகவே சுவாசப்பயிற்சியை ஆரம்பித்தல்வேண்டும். தேகபலமின்றி நோய்வாய்ப்பட்டு இந்திரியம் கழிவுற்று புலன்கள் வலிகெட்டு யிருக்குங்காலத்தில் தொடங்குதலென்பதும் அதனால் சித்தியடையலாமென்பதும் முடியாதகாரியமாம். எங்ஙனமெனில் பிராணனைநிலைக்கப்பண்ணும் பிராணாயாமத்துக்கு அடிப்படைகளான இயமம் நியமம் ஆதனம். அவைகள் தொட்டிற்பழக்கஞ் சுடுகாடுமட்டில், என்றபடி வாலிப வயதிலிருந்தே தொடங்கப்பெறல் வேண்டும். இல்லாதவரையில் இயம நியமாதி யாதனங்கள் என்னும் அடிப்படையில்லாத யோகப்பயிற்சி என்னத்திற்காம். ஒருபோதும் நிலைக்கமாட்டாது. இயமமாவது உயிர்களை வதைசெய்யாமை, பொய்சொல்லாமை, இச்சையில்லாமை, பிரதிப்பிரயோசனங்கருதாமை இவற்றைத்தான் திருமூலரும்:-

" கொல்லான் பொய் கூறான் களவிலானெண்குண
னல்லானடக்க முடையா னடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலாசட்காம
மில்லானியமத்திடையி னின்றானே" எனக்கூறியுளார்.

நியமமாவது ஆசாரம், அல்லது தேகசுத்தி, சந்தோஷம் அல்லது கெடுதி செய்தோர்க்கும் கேடுநினையாமை தவசியம் அல்லது தேகாபிமானம்விடுதல், சுவத்தியாயம் அல்லது ஆத்மா. அனாத்மா, தெரிசனங்கள், ஈஸ்வரப் பிராணிதானம் அல்லது முத்தொழில் நடத்தும் ஏகப்பிரம சொரூபத்தை அலங்காரவிதைகளால் ஸ்தௌத்தியஞ் செய்தல் இவற்றைத்தான் திருமூலரும்:-

" தபஞ் செபம் சந்தோடம் மாத்திகந் தானம்
சிவந்தன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசை யொண்மதி சொல்லீரைந்து
நிவம்பல செய்யின் நியமத்தனே. எனக்கூறியுளார்.

ஆசனவகைகளாவன, சுவத்திகம், கோமுகம், வீரம், சிங்கம் பத்திரம், மயூரம், சித்து, பத்மம், சுகம்என்னும்நவவிதங்கசாரம்

(தொடரும்)

மாணவர் பகுதி.

பிறையாறு ஸ்ரீமான், ப. அ. கிருஷ்ணசாமிப்பிள்ளை அவர்கள்.
(மலர் 1. இதழ் 6. பக்கம் 178-ன் தொடர்ச்சி)

ஆகவே, எந்தக்காரியமும் அதுமுடியுங்காலத்தில்தான் முடியுமென்று வாளா நாட்போக்காது மேற்கூறிப்போந்த விஷயங்களையறிந்தும் வீணு யிருத்த லழகாமோ? யாவுந் தெய்வந்தருமென வொருவன் சும்மா விருத் தலும் நன்றாமோ? மெய்யை வருந்தி யன்றோ விரும்பியபயனைப் பெறு தல் வேண்டும். அன்றியும்,

"தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்."

எனவள்ளுவனர் வாய்மலர்ந்திருத்தலின், முயற்சி யில்லாதான் பிறர்க்கு முபகாரியாதல யாங்ஙனம்? படைகண் டஞ்சுவானுக்குப் படைக்கலன்க ளால் பயன்யாது? ஆகவே,

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்."

முன்வினையின் பலத்தைக்கண்டு அஞ்சாத ஆள்வினையுடையார் அவ்வினை யையும் புறமுதுகிடுமாறு செய்விப்பர் எனத் தெரியக்கிடத்தலின் முயற் சியிற் சிறிதும் இளையாது, எடுத்தகாரியம் முடியாவிடினும் அடுத்தடுத்து முயல்வார்களாக.

"அவனன்றி யோரணுவு மசையாது" என்னுங் கூற்றுப்படி யாவும் தெய்வச் செயலால் முடியும் என்பதுண்மையே யெனினும், நாம் ஒரு பொருளடைய வேண்டுமேல் அதனிமித்தம் தக்கவழியில் முயன்றாலன்றி அதுமுட்டன்றி முடிதல் யாங்ஙனம்? பல்லாற்றானும் முடித்து வைத்தல் முருகன் கடைமையே யாயினும முயன்றாலன்றி யினிதுமுடியுங் கொல் லோ? "அவனருளாலே அவன்றாள் வணங்கினுங்" கூடமுயற்சியு மொ ன்று இன்றியமையாற் பாலதன்றோ? சுசீலையார் கூறுமாறு பாலடிசிலை வெள்ளியங்கலத்தில் இட்டுப் படைப்பினும் உண்பார்முயற்சி செய்யாரா யின் உண்ணற்கியலுமோ? ஆகவே முயற்சி பல்வகை நலங்களையும் பெற் றய்தற் கத்தியாவசியக மானதொன்றென்றெண்ணி அனவரதமும் இடை யறாது அந்நெறிக்கண் நடந்து இன்பந்துய்ப்போமாக. அன்றியும்,

"செயத்தகு முயற்சி செய்திடில் செயிர்தீர்
செய்யவள் மணாளனும் இரங்கி
வியத்தக வேண்டும் யாவையும் அளிப்பன்
விளம்புறு முயற்சி செய்யானேல்
நயத்தகு போகம் அளித்திடான் என்று
நானிலத் தறிஞர் நன்குரைப்பர்
உயர்தகு நெறி மாலடி யுனலொன்றே
ஓர்ந்த மாதவப் பெருங்கடலே."

என்னும் பெரியார் கூற்றிருத்தலின் எல்லா நன்மையும் எய்தற் கேற்றது முயற்சி யொன்றே என்பது பெற்றாம். நலன்

தமிழ் சித்த வைத்தியம்.

தில்லையாளி, வைத்தியபதி, ஸ்ரீமான், சி. ஆறுமுகம்பிள்ளை அவர்கள்.

மலர் 1. இதழ் 5. பக்கம் 149-ன் தொடர்ச்சி.

திருமூ. வை, 600.

பார்த்திடென்றீரே நீர்பார்க்குநூலெங்குண்டு, தேர்த்துமடக்குந் தெக்ஷணபாகத்தில், ஆர்த்திடுமொரு நூற் றறுபதாமண்டத்தில், கோர்த்திடு சித்தர் குலாவிப்படிப்பதே.

அகஸ்தியர் சௌ, 1500.

ஆமென்ற என்போகத்தியனுரும், அருளினேனுமென்னுடைய சீஷர் பதினெண்பேர், தேமென்ற தென்பொதிகை தென்கயிலை சீஷர் தேற்றினாவர் பெருமைதேசமதிற் சொல்வார்.

போ 7000,4-ம் காண்டம்.

என்னவேதங்வந்திரி என்றசித்து எழிலானகாயாதி கற்பங்கொண்டு தென்பொதிகை தனிற்சென்று மேருதன்னில் தேற்றமுடனகத்தியனும் தன்னைக்கண்டு பாஅன்னசாத்திரங்கள் உள்ளாராய்ந்து அவர்மீதில் பக்ஷம் வைத்து அன்புகூர்ந்து, சொன்னமொழிதப்பாமல் நயங்கள்பேசி, சூட்சாதி, சூட்சமெல்லாம் அறிந்தார்தானே.

காணலாம் அகஸ்தியனுர் காவியத்தில் கருவான பன்னீராயிரத்தி லப்பா
பூணலாம் பனிரெண்டு காண்டத்துள்ளே புகட்டினுர் கோடிவகைக் களஞ் [சியங்கள்
தோணவே யண்டசராசரங்க ளெல்லாம் துறட்டிஎன்ற குறடதுபோற் கூறி [னுர்காண்
வேணபடி குருநூலாம் பன்னீராயிரம் விருப்பமுடன் பாடிவைத்தார் முனி [வர்தாமே

மேலேகாட்டியபடி பாடல்களில் முதல்பாட்டில் இச்சித்தவைத்திய சாத்திரங்கள் எல்லாம் தென்னுட்டில் பொதியமலையின்கண் ஆராய்ச்சி செய்யப்பட்டதென்றும் இரண்டாவது பாட்டில் தமிழ்முனிவரான அகஸ்தியர், சித்தர் பதினெண்மரும் தன்னுடைய சீஷர்களென்றும் அவர்களெல்லாம் தன்னுடைய, யதாஸ்தானமாகிய பொதிகையில் தான் தன்னிடம், வைத்தியமுறை படித்துத்தேறினுரென்றும் அவர்கள் மிகவும் பெருமைவாய்ந்தவர்களென்றும் மூன்றுவதுபாட்டில் (வடதேச) தன்வந்திரிபகவானும் பொதிகையில் அகஸ்தியரிடம் சென்று வைத்தியநூலாராய்ச்சி பயின்று சூக்ஷும், மானநூல் செய்தாரென்றும் 4-வது பாட்டில் அகஸ்தியரே 12000-பாடல்களால் ஒருநூல் செய்தாரென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவற்றுல் சித்தவைத்திய நூல்களெல்லாம் பதினெண்சித்தர்களும் பொதிகையிலேயே போய்வந்து ஆராய்ந்து நூல்கள் செய்ததாகவும் அந்த நூல்களே சகல சித்தவைத்தியநூல்களும் என்பது நன்றாய்புலப்படுகின்றது. இதனுல் பொதிகையிலிருந்து விளைதவை யெல்லாம் தமிழைத்தவிர வேறு பாஷைக்கு இடமேது. சமஸ்கிருதத்துக்கும், பொதிகைக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்பதை வாசகர்கள் நன்கறிய வேண்டும்.

கதம்பம்.

உத்தரஞான சித்திபுரத்து சிற்சபையமைப்பு.

தூலவுபாசனைக்கேற்ற திருக்கோயில்களின் அமைப்பு.

(மலர் 1. இதழ் 6. பக்கம் 178 ன் தொடர்ச்சி)

உலகத்தைப் படைத்துக்காத்து அழித்து மறைத்து அருளும் ஒருதனி முழுமுதற்பரமன் உறைதற்குரிய உரிமை ஆலயம் உயிர். இவ்வுயிரினுக் குரிய உயரிய ஆலயம் உடல். இவ்வுடலின்மாட்சிமை உபநிடதங்களிற் கூறிய ஒப்பற்ற மூவகை நிலையினும் பஞ்சகோசங்களினும் அங்காதி பாதங்களினும் சுகரண வாதங்களினும் தொண்ணூற்றாறு தத்துவங்களினும் வைத்து உணர்வார் ஒப்பற்ற நாவலர். இவ்வுடல் பூமண்டலாதிகளினும் பூபூதாதிகளினும் வசித்தற்குக்கிருகலக்ஷணம் அறிதல்வேண்டும். இவ்வில்லின் நிர்மாணத்தைச் சிவாக்ஞையாலே பிரமதேவர் ஐம்முகங்களோடு விசுவகர்மாவாகத் தானே ஸ்தாபகன ஸ்தபதி சில்பி வர்த்தகி தக்ஷகன் என்ற அவதாரத்தில் மஹாவிசுவகர்மீயம் என்ற சிறந்த சாத்திரத்தை வேதாகம சாரமாகத்திருவுளம் பற்ற முப்பத்திரண்டு வழிநூல்கள் பிறந்தன. இவ்வழிநூல்கள் யாவும் க-ரு-ரு-கஉ-ரு பிரகரணங்களாக ஆரியர் மிலேச்சர் ஆதியர்க்கும் பிராமணாதி சதுர்வர்ணிகர்களுக்கும் அநுலோம பிரதிலோம சங்கர விராத்தியாதியர்களுக்கும் வைதிகர் அவைதிகர் முதலிய பலதிறப்பட்டார்க்கும் மற்றும் மற்றும் பிற பிறர்க்கும் ஏற்றவண்ணம் மயநூல் விவரிக்கும். இப்பிரகரணங்கள் மானசார சூத்திரத்தின் தொகைகூறுமிடத்துச் சுருக்கிவரைந்திருப்பதாவது:—

வாழ்த்தியல் வகையே வானவன் வணக்கமே
யேத்திய சிற்ப னெறிவிலக்கணமே
மூழக்கோல் முறையே முறைபடி வாஸ்துவே
யழக்குத விலாதவ னுதிக்கு மியல்வே
இருசுட ரமயமே யில்லோன் காண்டலே
வருமயன் றன்னை மரபுளிகோடலே
வருணக் கிரியைய மனைகோலுதலே
தருண மனைகோ லாத்சனிச் சாதியே
தூதனிலையே சுபாசுப சகுனமே
நாதசிற்பன் நற்கோன் விர்ச்சியே
அமைப்போ னமைக்கு மருந்திறற் கூறலே
சமைபெரு மாசான் றனைக்கௌரவித்தலே
சாதிக்கேற்பச் சதுர மமைத்தலே
யாதியிடமே யட்ட யோனியே
யோனிமாறலே யோகமில் குற்றமே
யூனமார் குத்தலே யூகித்தறிதலே
திக்கின் தசையே திகழ்சங் கமைத்தலே

(தொடரும்)

ஆன்ரோர் மொழி.
——————.———பத்திரிகைகள் பல ஆன்ரோர் மொழிகளை உள்ளவாறே எடுத்துக்காட்டி அவற்றின் உட்பொருளையும் அவ்வான்ரோர் பெருமையை யும் அடுத்து எடுத்துக் கூறுதலே மரபாம். பழையன கழித்துப் புதியன புகுத்தல் ஆன்ரோர் ஆப்தவாக்கியங்களிலொன்று. எமதுபத்திரிகையின் நோக்கம் ஆன்ரோர் ஆட்சியையும் சிறந்த பிரசுரங்களின் அமைதியையும் இனிப்பிரசுரமாகப்போகும் சிறந்த நூல்களின் தகுதியையும் எடுத்துக்கூறுதலேயாம். அதனை உய்த்துணர்ந்து கொள்ளுமாறு எமது ஆப்த நண்பர்களைக் கேட்டுக் கொள்ளுகிரோம், இங்ஙனம் அன்னாரைப்பற்றி யாம்யெடுத்துக்கூறுதல்அவர்கள்பால் யாம்வைத்த பெருமதிப்பே அதனை யவ்வாறே கொள்ளும்வண்ணம் நமது ஆச்சாரியர்முதலியோரைக்கெட்டுக்கொள்ளுகிரோம். முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும் பொன்னேபோற் போற்றிக்கொள்ளுகின்ரோம்.

மதிப்புரை.

குமாரதேவ வள்ளலாருளிய சாத்திரம் பதினாறனுள் சுத்தசாதகமும் அந்நூலைப்பின்பற்றிய உண்மை முத்திநிலை என்னும்விய சமுஞ் சேர்ந்த புத்தகமொன்று கிடைக்கப்பெற்ரோம் இப்புத்தகம் புதுவை 4. அம்பலத்தாடையர்வீதி. (நந்திப்பப்ளிஷிங் ஹௌஸ்) நந்திவெளியீட்டு மன்றத்தவால் பதிப்பித்து வெளியிடப்பட்டது. இந்நூலில் அரிய பெரிய விஷயங்களெல்லாமெவருமெளிதி லறியும்படிக்கமையப்பட்டது. குறைந்த விலையிலுதவப் பட்டது. மிக்க ஊக்கத்தோடு வெளியிடும் இத்தகைய அரிய தொண்டு யாவரும் பாராட்டற்குறியது. அப்புத்சகம் விலை அணா ஒன்றுதான் இவ்விலை. இப்புத்தகம் அச்சிக்கூலிக்கே போதாது. பலனைக்கருதாது உலகநன்மைக்காகவே முன்வரும் உத்தமர்களின் முயற்சிப் பழுதுராவண்ணம் ஊக்குவது நம் நாட்டினர்களின் கடமைகளிலொன்று வென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவர். இந்நூலின் விஷயம் தேகமேதானுமொரு சித்திபெற முயல்வதே முத்திநிலை. தேகம் நீணமாக உயிரின்பம் பெறுதல் முத்தியன்று என்பதேயாம். இதற்காதாரமாக அனேக தத்துவப் பெரியோர்களின் மேற்கோளெல்லாம் நிரம்பியுள்ளது இதை எழுதினவர் யாழ்ப்பாணம் ஸ்ரீமாந் சந்தையாபிள்ளையவர்கள். வேண்டுவோர் மேலேகண்ட விலாசத்திற்கெழுதிக்கொள்ளலாம்.

மதிப்புரை.

பரங்கிப்பேட்டை கணித சோதிடர் ஸ்ரீமான். சு. வ. குத்துக்குமாரசுவாமி அவர்கள் "மச்ச ஸாஸ்திரம்" என்ற நூல் ஒன்று அனுப்பியுள்ளார். இந்நூலானது பழைமையாயுள்ளதைத் தமிழில் மொழிபெயர்த்து உலகோபகார்த்தமாகக் கொடுத்துதவப்பட்டது. சரீரத்தின் ஒவ்வொரு பாகத்திலுமுள்ள மச்சங்களின் நன்மை தீமையைப்பற்றி விபரமாகத் தெரிவிப்பது. வேண்டியவர்கள் மேலேகண்ட விலாசதாருக்குத் தெரிவித்துக்கொள்ளலாம்

———

உ

அ. த.

கடந்த அட்சய-௵ தை-மீ 5-உ

தருமச்சாலை தைப்பூச உற்சவத்துக்காக இரங்கூன்வசூல்

தேதி	உத்யோகம் வீதி தொழில்	பெயர்	ரூ	அ	ப
5-1-27	கருணீகமரபு	பஜார் குமாஸ்தா, கிருஷ்ணசாமி பிள்ளை வரவு	1	0	0
	மரஎற்றுமதி	M. V. சுப்பிரமணிய முதலியார்	0	8	0
	ஸ்டாம்புவெண்டர்	K. நாகசுந்தரம் பிள்ளை	0	8	0
	ஷை	S. V. N. நாயுடுகாரு.	0	8	0
	ஜவுளிக்கடை	முத்துக்கிருஷ்ண செட்டியார்.	1	0	0
	இந்தியாகப்பல்&Co.	புரோக்கர்S. K. கிருஷ்ணபிள்ளை.	1	0	0
	மெர்ச்சண்வீதி	G. சவுரிராசலு நாயுடு.	1	0	0
	படகுஅதிபர்	ரூம. தியாகராச முதலியார்.	1	0	0
	முகல்வீதி	ச. க. சபாபதி செட்டியார்.	1	0	0
	ஷை	க. முத்துச்சாமி பிள்ளை.	0	8	0
	ரேஙளாங்கண்ணி	தெ. நா. வை. கடையதிபர்.	3	0	0
	கமிஷன்கடை	க. வெ. ரூம. ராமனுதசெட்டியார்	6	0	0
	ஷை	ஜெயராம செட்டியார்.	1	0	0
	ஷை	V. M. R. நாயுடு.	2	0	0
	காபிகிளப்பு	R. குப்புசாமி அய்யர்.	5	0	0
	ஷை	T. M. ராஜகோபால ராஜா	1	0	0
	ஷை	சு. செல்லமய்யர்.	0	8	0
	நகைவர்த்தகம்	வெ. சுப்பையா பத்தர்.	1	0	0
	ஷை	அ. பஞ்சாக்கரம் பிள்ளை.	1	0	0
9.1-27	A. B. CO.	B. ராமசாமி ராஜா.	5	0	0
13 1 27	ஜீவகாருண்ய சங்கம்	B. ரத்தனசபாபதி முதலியார்.	0	12	0
	ரெய்மண்டி	V. K S. S. அயோத்தி நாயுடு.	0	4	0
14 1 27	கன்னிக்குயின்	வெ. ப. கடைஅதிபர்.	5	0	0
	முகல்வீதி	C. V. நாயுடுகாரு.	3	0	0
14 1 27	பத்மநாதன்	வைத்தியர் செ. மு. குப்புசாமி பி	3	0	0
	ஷை	சோ. ஆறுமுகம்சேவை	2	0	0
	ஷை	P. K. பெருமான்	1	0	0
	ஷை	பள. கு. மு. கடை அதிபர்.	1	0	0
	பூந்தட்டான்	நா. நா. கடை ஏஜண்டு, R. முனியாண்டி பிள்ளை.	1	8	0
		கூ	51	0	0

தேதி	உத்யோகம் வீதி தொழில்	பெயர்	ரூ	அ	ப
14 1 27	அட்வகேட் கிராணி	S. M. நாயுடுகாரு.	1	0	0
	ஸ்காட்கம்பேனி	நாருயணன்.	1	0	0
	கீமந்தான்	கா. அ. பெ. க. இருளப்பன்.	1	0	0
	முகல்வீதி	மு. சா. மு. மு. கடை,			
	ஷை	ஏஜண்டு குருசாமிநாயுடு.	1	0	0
	ஷை	சி. பெரி. கடை கிராணி,			
	ஷை	சோலையப்பன்.	3	0	0
	அட்வகேட்				
	B. A; B. L.	R. ஜகன்னாத முதலியார்.	2	0	0
15 1 27	அட்வகேட் கிராணி யார்	க. சுப்பிரமணிய பிள்ளை.	3	10	0
	பசுமந்தான்				
	னமால்காஸ்				
17 1 27	கோர்ட்கிராணியார்	க. கனகசபைபிள்ளையால் வசூல்	10	14	0
		மூன்று பேர்மூலமாக கூடுதல்.	73	8	0
		இதற்குமுதல்மணியாடர் ஸ்ரீலஸ்ரீ சுப்பராயசுவாமிகள் பெயருக்கனுப்	40	0	0
		பிய மணியார்டர் தந்தி சிலவு	1	8	0
		க. சு. மூலம் ஷை சுவாமிகள், பெயருக்கு ரூ	20	0	0
		தந்தி மணியாடர் சிலவு	1	2	0
		மூன்றாவது க. ச. மூலம் தொகை ரூ	10	0	0
		மணியார்டர் சிலவு	0	14	9
		ஆ கூடுதல்	73	8	0

பிழை திருத்தம்.

இச்சஞ்சிகை 2-வது பக்கம் தலையங்கம் திருவருள் முறையீடு முதலாவது பாசுரத்தில் முதலாவது வரியில் "வான் வேண்டிக் கோண்ட மருந்தோ முக் கண்கோண்ட வள்ளலனை,, எனத் திருத்தி வாசித்துக்கோள்க.

அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங்கருணை.

தமிழ்ப்பண்டிதர் நிலைமை.

தமிழ்ப் பண்டிதர் பலர் தக்க உத்தியோகங் கிடைத்தலின்றி வாளா உலவுகின்றனர். அவர்களுள் அநேகர் தம் நாவன்மையாலுங் கைவன்மையாலும் பிறவாற்றாலும் தக்க பிரபுக்களைத் தேடியடுத்துக்கொண்டு அவர்களையொட்டியுதவிபெற்றுப் பல தமிழ்நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தியும் தாமே சில புதுநூல்களைப் புனைந்தும் அவற்றைப் பிரசுரப்படுத்தியும் வியாபாரிகள் சிலரைக்கொண்டு தமிழ் நூல்கள் சிலவற்றிற்கு உரைசெய்து வெளிப்படுத்தியும் முன்னரே அச்சிட்ட நூல்களை மீட்டும் அச்சிடுவித்தும் பத்திராதிபர்களை அடுத்தும் நல்லாற்றான் உயிர்வாழ்கின்றனர். வேறுசிலர் கலாசாலைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் சென்று சேர்ந்து வேலை பார்க்கின்றனர். மற்றுஞ்சிலர் அரசியல் துறையில் உழைப்பார்க்கு உதவிபுரிந்து ஜீவனஞ்செய்து வருகின்றனர். சிற்சிலர் தத்தம் கல்வி நலத்தைப் புகழ்ந்து கொள்வதனோடு நில்லாமல் பிறரது கல்விநலத்தைப்பற்றி இழிவு படுத்திக்கூறி ஒருவரோடொருவர் வாய்ப்போர் புரிந்து வாழ்நாள் கழிக்கின்றனர். தமிழ்ப்பண்டிதர்கள் அதிகமாக அவர்கள் பாக்கத்தக்க வேலைகள் குறைவாயிருக்கின்றனர். இவ்வாறு ஆயிற்று தமிழ்வாணர்கதி. இதனையுய்த்துணர்ந்து இளம்பிள்ளைகளைப்பயிற்றுவிக்கும் பிரதம வித்தியாசாலைகளில் இப்பண்டிதர்களை வேலைக்கு அமைத்துத் தக்க தமிழ்நூல்களைப் போதிக்கும்படி செய்து தமிழ் பண்டிதர்களையும் ஆதரித்தல் மிகவும் மேதக்கதன்றோ? கீழ்வகுப்பில் தமிழ்நூல்களைத் தக்கவாறு கற்பிக்கப்படாமையாலும், கிராமாந்தரங்களில் தக்க தமிழ்க்கல்வி புகட்டப்படாமையாலும், அப்பிள்ளைகள் மேலேறிப் படிக்குமிடத்தும் கிராமஜீவியம் செய்யுமிடத்தும் பெரிதும் பிழைபோகின்றனர். அஃது அல்லாமலும் தமிழ்ப்படிப்பில் மிக்க வெறுப்புடையரும் ஆகின்றனர். இஃது நிரம்பவும் பரிதபிக்கத்தக்கதன்றோ? இதனை நமது மேலதிகாரிகளும் பொதுநலப்பிரியரும் சுய அதிகார விருப்பமும் சுதேசக் கல்வியபிவிருத்திசெய்ய வேண்டுமென்றும் பிரசங்கஞ்செய்யும் தேசாபிமானிகளும் அறிந்து தமிழ் வித்துவான்களுக்குத் தக்க உதவி புரிவார்களாக. தமிழ்பண்டித பரீக்ஷைகொடுத்தவர்களும் தமிழ்க்கல்வி புகட்டப் போதருமுறையிற் தேர்ச்சிப்பெற்றவர்களும் சர்வ கலாசங்கப்பட்டம் தரித்தவர்களும் தக்கவேலை தமக்குக்கிடைத்தல் வேண்டுமென்று விருதாவாகக் காத்துக்கொண்டிராமல் யாதேனும் ஓர்வேலையைத்தேடி அதில் அமர்ந்து உத்தம ஜீவனஞ்செய்து லோகோபகாரிகளாக விளங்குதல்வேண்டும். அற்பத் தொழில் என்று எதனையும் அலட்சியம் செய்தலாகாது வேலையைப் பொருத்ததன்று பெருமை. வேலையைச்செய்வார் தகுதியைப்பொருத்த[illegible] முடிக்கோ சரக்கு முடிக்கோ, செய்தொழிற்றிற[illegible] தல் வேண்டும்.

சந்தாதாரர்களுக்கு ஓர் அறிக்கை.

மாதந்தோறும் நாம் அனுப்பிவரும் பத்திரிகை சிலருக்கு நேராகவும், சிலருக்குகைமாறியும் சிலருக்குநட்பினர் மூலமாகவும் கிடைக்கும். பத்திரிகை கிடைத்தவுடன் சந்தாதாரர்கள் நமது நேரான விலாசத்தை எழுதியனுப்ப வேண்டியது. அத்துடன் தமது நண்பர்களையுந் தூண்டி இப்பத்திரிகைக்கு சந்தாதாரர்களாகச் செய்விப்பது ஓர் பேருபகாரமாகும். பத்திரிகை வேண்டாத அன்பர்கள் நமக்கு வீண்வேலைக்கும் வீண்செலவிற்கும் இடமில்லாமல் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவித்து விட்டால் அதுவே ஓர்சிறந்த கைம்மாறாகும். பத்திரிகை மாதந்தோறுங் கிடைக்காதிருந்தால் உடனே பத்திராதிபருக்கு அறிவிக்க வேண்டியது. ஏழுமாதங்களாகியும் சந்தாதுகையை அனுப்பாமலிருப்பது தருமமல்ல. ஆகையால் தயவுசெய்து சந்தாதுகையை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

வடலூர். தி. கோ. வரதராஜர், பத்திராதிபர்.
தில்லையாடி போஸ்டு, மாயவரம் வழி.

வருடசந்தா:- இந்தியா, பர்மா, சிலோன்,
முதலிய விடங்களுக்கு ரூ 2—0—0
வெளிநாடுகளுக்கு ரூ 2—8—0